# புதியவன்
PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 83 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை I வியாழன் , 15/05/2014




நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்றிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி:- 023-2223545, மின்னஞ்சல் :- niththilam31@gmail.com


www.putheyavan.com

# நினைவேந்தலை தடுப்பது பிரிவினைக்கே வலிவகுக்கும்!

## தேசிய சமாதானப் பேரவை கவலை



**(கொழும்பு)**
வடக்கில் உள்ள தமிழர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை கட்டமைப்புக்களை தாங்களே உருவாக்கிக் கொள்வதற்கான வெளியை இலங்கை அரசு மீண்டும் ஒருமுறை ஏற்படுத்தி விட்டுள்ளது. இது பிரிவினைவாதச் சிந்தனைக்குப் பங்களிப்புச் செய்யும்.
இவ்வாறு தெரிவித்துள்ளது தேசிய சமாதானப் பேரவை.
மாத்தறையில் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்தும் அரசு போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொது நிகழ்வுகளுக்குத் தடைவி தித்துள்ளமை குறித்தே பேரவை இந்தக் கருத்தை முன்வைத்துள்ளது.
இது தொடர்பில் அது விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மே 18ஆம் திகதி மாத்தறை யில் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துகிறது அரசு. இதற்காக ஒருவார காலத்துக்கு அங்கு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்தே வெற்றிக் கொண்டாட்டங்

(11ம்பக்கம்பார்கக)

## தமிழீழப் பிரகடனத்தின் 38 ஆண்டுகள் நிறைவு

இலங்கை தமிழர்களின் வரலாற்றில் பல திருப்புமுனைகளையும் போராட்ட களங்களையும் ஏற்படுத்திய வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இன்று 38 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடு தலைக் கூட்டணியின் மாநாட்டில் 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்பதே அத் தீர்மானத்தின் சாராம்சம் ஆகும். இந்த தீர்மானத்தை முன்வைத்து 1977 தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடு தலைக் கூட்டணி தமிழர் பிரதேசங்களில் பெரும் வெற்றி பெற்றது.

தமிழர் தந்தை எனப்படும் செல்வநாயகம் தலைமையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டையில் இந்த பிரகடனம் செய்தனர்.

(11ம்பக்கம்பார்கக)

## இன வாதத்தில் கிழக்கு மாகாணசபை! ஆதங்கப்படுகிறது கூட்டமைப்பு

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணசபை தமிழ் மக்களையும் தமிழர் பிரதேசங்களையும் திட்டமிட்டு புறக்கணித்து இனரீதியாகச் செயற்படுகிறது.
இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள 10 கிராமிய அபிவிருத்தித் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூட தெரிவு செய்யப்படவில்லை. மட்டு. மாவட்டத்தில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை. கடந்தாண்டும் இதே நிலை.

எனவே இதற்கு முடிவுகட்டு முகமாக கிழக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல உறுப்பினர்களையும் திரட்டி பாரிய போராட்டம் நடாத்தவிருக்கிறேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு

(11ம்பக்கம்பார்கக)

## இலங்கையில் தொடர்கிறது சித்திரவதை கவலை தெரிவிக்கிறது மன்னிப்புச் சபை

**(நியுயோர்)** வெளிநாடுகளில் பணியாற்றும் இலங் கைய்ர்கள் பணிகளில் சேரும் போது பல்வேறு துஸ்பிரயோகங்களுக்கு உட்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி பிரான்ஸிஸ் க்ரீபீன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் நிலை

(11ம்பக்கம்பார்கக)

## பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் ராஜபக்ஸ பங்கேற்க மாட்டார்?

**(கொழும்பு)** ஜனாதிபதி பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க மாட்டார்?
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க மாட்டார் என தெரிவிக்கப்படுகிறது,
கிளாஸ்கோவில் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.
ராஜதந்திர ரீதியான சவால்களை தவிர்க்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப் பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது
ஜனாதிபதி மஹிந்தவின் பிரித்தானிய விஜயம் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடுமென வெளிவிகார

(11ம்பக்கம்பார்கக)

## நாடு கடந்த தமிழீழ அரசிற்கு பிரித்தானியா தடை விதிக்கவில்லை

நாடு கடந்த தமிழீழ அரசிற்கு பிரித்தானியா தடை விதிக்கவில்லை என தெரிவிக் கப்படுகிறது.
நாடு கடந்த தமிழீழ அரசிற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது.
எனினும், இந்த தடையுத்தரவினை பிரித்தானியா ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
பிரித்தானியாவில், நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 17ம் திகதி லண்டனில் "இலங்கையை நிராகரிப்போம்" என்ற மாநாடு நடைபெறவுள்ளது.
இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக தடை விதிக்குமாறும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(11ம்பக்கம்பார்கக)

## எம் உறவுகளுக்காக கண்ணீர் விடவும் தடுக்கிறது அரசு ஆதங்கப்படுகிறார் அவைத் தலைவர்

**(யாழ்ப்பாணம்)** உறவுகளை இழந்த எங்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுநாளை நினைவுகூருவதற்கு உரிமையுண்டு என வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இயல், இசை, நாடக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றும் போது,
எந்த சட்டத்தாலும், அடக்குமுறையாலும் ஒரு மனிதனின் தோன்றாப்பொருளாக இருக்கும் உள்ளுணர்வைக் கட்டுப்படுத்த முடியாது. தமிழ் தேசிய மக்களின் உணர்வுகளும் அபிலாசைகளும் எதிர்பார்ப்புக்களும் நிறைந்த யாழ். பல்கலைக்கழகம்

(11ம்பக்கம்பார்கக)


Ishara Motors
BAJAJ
Spare parts sales dealer for David Pieris Motor Company
Distributor for MRF Tyre & Tube David Pieris Motor Company Ltd
T.p-023 2223464 Mob : 077 7949106 E-mail : isharamotorsmn@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

# தலைமன்னார் ஸ்ரேசனில் புகையிரத காணியில் இருப்பதாக கூறப்படும் 22 குடும்பங்களை உடனடியாக வெளியேறக்கோரிக்கை.



(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியில் வாழ்ந்து வரும் குடும்பங்களில் சுமார் 22 குடும்பங்களை எதிர்வரும் 14 தினங்களுக்குள் குறித்த பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என புகையிரத திணைக்கள அதிகாரிகள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில்,,,,,

தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியில் புகையிரத நிலையத்திற்கு சொந்தமானது என கருதப்படும் குறித்த பகுதியில் சுமார் 40 தொடக்கம் 45 வருடங்களுக்கு மேலாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களும் உள்ளது.குறித்த பகுதியில் உள்ள 22 வீடுகளில் பல வீடுகள் நிரந்தரமான வீடுகள்,ஒரு சில வீடுகள் தற்காலிக கொட்டில்கள்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு அரச சார்பற்ற அமைப்புக்களினால் ஏற்கனவே வீட்டு த்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புகையிரத தலைமை யகத்தினால் தலைமன்னார் ஸ்ரேசன் கிராம அலுவலகர் ஊடாக கடந்த திங்கட்கிழமை முதல் குறித்த 22 பேருக்கும் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது.

புகையிரதகாணியில் அனுமதியில்லாமல் நிர்மாணிக் கப்பட்டுள்ள நிர்மாணிப்பை அகற்றிக்கொள்ளுமாறு அறிவித்தல் எனும் தலைப்பில் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் புகையிரத திணைக் களத்திற்குரிய புகையிரத காணியை அனுமதி யில்லாமல் கைப்பற்றிக்கொண்டு அனுமதியற்ற நிர்மாணிப்பை மேற்கொண்டுள்ளதாக தமக்கு அறிவிக்க ப்பட்டுள்ளதாகவும்,

அக்காணிளை பயன்படுத்துவது சட்டவிரோதமானதாக காணப்படுவதோடு உடனடியாக இக்காணியில் அமைக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புக்களை அகற்றி எதிர் வரும் 14 தினங்களுக்குள் அகற்றப்படாது விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 40 தொடக்கம் 45 வருடங்களுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வருகின்ற குறித்த காணியில் இருந்து எங்களை எழும்பிச் செல்லுமாறு கூறினால் நாங்கள் எங்கு செல்வது என அந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே இக்காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வைப்பெற்றுத்தருமாறு அந்த மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

## மன்னார் எமில்நகர் முதலாம் குறுக்குத் தெரு நீண்டநாட்களாக புனரமைக்கப்படமலிருப்பதால் மக்கள் விசனம்



(அலுவலகச்செய்தியாளர்)

மன்னார் எமில்நகர் முதலாம் குறுக்குத் தெரு நீ்ண்ட நாட்களாகியும் புனரமைக்க சம்பந்த ப்பட்ட அதி காரிகள் நடவ டிக்கை எடுக் கவில்லை.

நெடுநாட்களாக குறித்த வீதியினை புனரமைத்து தரும்படி அதிகாரிகளிடம் கோரிக்கைகளை குறித்த பகுதி வாழ் மக்கள் முன்வைத் திருந்தப்போதிலும் அதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லை

குறிப்பாக குறித்த எமில்நகர் கிராமத்தில் புதிதாக உருவாக்க ப்பட்டடுள்ள கிராமங்களில் வீதிகள் புனரமைக்கப்பட்டள்ளது எனினும் பழமைவாய்ந்த குறித்த கிராம த்தின் முதலாம் குறுக்குத்தெரு (அன்னலிங்கம் தெரு) இன்று வரை புனரமைக் கப்படவில்லை என குறித்த பகுதியை சேர்ந்த மக்கள் விசம் தெரிவிக்கின்றனர்.

கடந்த நாட்களில் இடைக்கிடை பெய்த மழை காரணமாக குறித்த வீதியில் நீர்தேங்கியுள்ளது அதனை அடுத்து குறித்த வீதியினுடாக செல்லும் மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த விதியினை புனரமைத்து தரும்படி குறித்த பகுதியை சேர்ந்த மக்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர்

## சீன இராணுவப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம்

சீனா இராணுவத்தின் மூன்றாவது அதி உயர் பதவியை வகித்து வரும் ஜெனரல் க்ஸ்யூ குயிலியாங் (General Xu Qiliang) தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

சீன் இராணுவக்குழு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இந்தக் குழுவில் 25 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்'வின் அழைப்பினை ஏற்றுக் கொண்டு இந்தக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

பயிற்சி, கூட்டுப் பயிற்சி மற்றும் ஏனைய இராணுவ உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சீனப் பிரதிநிதிகள் குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஸ உள்ளிட்ட பல்வேறு முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

# சிவில் உடையில் படையினர் மிரட்டல்! கூட்டமைப்பு குற்றச்சாட்டு

இறுதிப் போரில் மரணித்த தமிழ் உறவுகளை நினைவுகூரும் நினைவேந்தல் நாள் நெருங்கும் வேளையில், முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் ஆகியோர் கடந்த சில தினங்களாக சிவில் உடையில் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் விசனம் தெரிவித்தனர். .

நினைவேந்தலை நினைவுகூரும் இடமான முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் படைப்பிரிவினர், அங்குள்ளவர்களின் பெயர் விவரங்களைத் திரட்டுகின்றனர் என்று குறிப்பிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள், வீதிகளில் செல்லும் மக்களையும் மிரட்டும் வகையில் விசாரணை செய்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டனர்.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பயப்பீதியுடன் உள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வை மக்கள் நடத்தி விடக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையாகவே படைப்பிரிவினர் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக முல்லைத்தீவின் முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாணசபையில் தீர்மானம் கொண்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் து.ரவிகரனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நீ விடுதலைப் புலியா? என்று கேட்டு நேற்றுமுன்தினம் தன்னிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்தனர் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்களை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மறுத்துள்ளார்.

இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை வடக்கில் பொது இடங்களில் கடைப்பிடிப்பதற்கு அரசும் அதன் படைகளும் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், புலம்பெயர் தேசங்கள் எங்கும் பேரெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனு்டிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கை தொடர்பான விசாரணைகள் அடுத்த மாத்தில் ஆரம்பம் ?

இலங்கை தொடர்பான விசாரணைகள் அடுத்த மாத்தில் ஆரம்பம் ?
இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகள் அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியிருந்தன.
இந்த தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை மனித உரிமை நிலைமைகள் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்கு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

இந்த விசாரணைக் குழுவினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை நியமிக்க உள்ளார்.
பெரும்பாலும் இந்த மாத இறுதியில் குறித்த விசாரணை ஆணைக்குழுவிற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மூவர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்றினை நவனிதம்பிள்ளை இந்த மாத இறுதி வாரத்தில் நியமிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணைகள் எதிர்வரும் ஜுன் மாதம் ஆரம்பமாகவுள்ளது.
விசாரணைகள் ஆறு மாத காலம் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை ஆணைக்குழுவின் நியமனம், மற்றும் அதன் பணிகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை விரைவில் இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளார்.

எவ்வாறெனினும், சர்வதேச ரீதியான விசாரணைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் விசாரணை ஆணைக்குழுவினை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை எனவும் இலங்கை அரசாங்கத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
இவ்வாறான ஓர் பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நியமிக்கப்படும் ஆணைக்குழு நாட்டுக்கு வெளியே இருந்து விசாரணைகளை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜனாதிபதியைச் சந்திக்கத் துடிக்கும் வீரவன்ச

அரசாங்கத்துக்குள் தற்போது பிரச்சினையை ஏற்படுத்தும் அமைச்சராக விளங்கும் விமல் வீரவன்ச, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்திப்பதற்கு எதிர்ப்பார்த்திருக்கிறார்.

தமது தேசிய சுதந்திர முன்னணியின் 2வது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சர்ச்சைக்குரிய யோசனை குறித்து பேச்சு நடத்தவே இந்த சந்திப்பை அவர் எதிர்ப்பார்ப்பதாக ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

13வது அரசியல் அமைப்பு நடைமுறை தொடர்பில் எவ்வித முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் மாநாட்டில் யோசனை நிறைவேற்றப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க தென்னாபிரிக்காவின் சிரில் சமபோஸா இலங்கைக்கு வரவுள்ள நிலையிலேயே விமல் வீரவன்சவின் இந்த யோசனை நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
புதேயவன் PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன் - உண்மை அறிந்து சொல்வேன்

இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# மறக்கத் தான் முடியுமா?

ஈழத்தமிழர்களின் அவலம் வார்த்தைகள் கடந்து வரைபினில் நிறைந்து நீண்டு விட்டது. இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னர் தொடங்கிய அடக்கு முறையும் இனவழிப்பும் இன்றுவரை தொடர்ந்த வண்ணமுள்ளது.

தமிழர்கள் ஏதாவது முற்பிறவியில் தீராத பாவம் செய்தார்களா? எனும் சந்தேகம் ஐதீக ரீதியில் எழுகிறது.

ஏனெனில் எப்போதுமே துன்பமும் துயரமுமே தொடர்கதையாக நீழ்கின்றது இவற்றுக்கு முடிவே கிடைக்காதா? இந்த இனம் விடிவு பெறவும் மாட்டாதா? எனும் வேதனை இயல்பாகவே எல்லோர் மனதிலும் எழுகிறது.

எனவே கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் தாயகமாம் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பேரவலத்தை மறக்கத்தான் முடியுமா? 2009 பெப்ரவரி 15க்குப்பின் மூங்கிலாற்றில் தொடங்கிய இன அழிப்பின் உச்சம் மே 18 வரை நீடித்தது இந்தக்காலத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது

திட்டமிட்டு இன அழிப்பைச்செய்த இலங்கை அரசாங்கம் தனது அரச அதிபர்கள் மூலம் வெளியிட்ட தகவலின் பிராகாரம் காணாமல் போன 1,46479 நபர்களின் நிலை என்ன இதற்கு இது வரை பதில் கூறவில்லை அவ்வாறான நிலையில் இனக்கலப்பும் இராணுவ ஆட்சேர்ப்பும் நில அபகரிப்பும் பௌத்த மயமாக்கலும் நீளுகின்றன இதை தடுப்பது யார்?


இலங்கை அரசாங்கம் தன்னுடய நாட்டு மக்களை தானே கொலை செய்து விட்டு ஐந்தாவது தடவயாகவும் மார் தட்டி வெற்றி விழா மகுடம் சூடுகின்றது.

ஆனால் அந்த கொல்லபட்ட இனத்தின் உறவுகள் அஞ்சலி செலுத்த முடியாதாம்.
புத்தரை பின் பற்றும் பௌத்தர்களின் சித்தாந்தம் இதுதானா? பாவம் புத்தர் அவருடய பெயரை உச்சரிப்பதற்கே கொலை வெறிபிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு தகுதி இருக்கிறதா?

அப்பட்டமான முறையில் துடிக்க துடிக்க கொலை செய்யபபட்டவர்களின் ஆத்மாக்கள் ராஜபக்சவினரை நின்மதியாக வாழ விடாது. உறைந்து போன கண்ணீரும் மறைந்து போன உதிரமும் நிச்சயம் · நியாயத்தை நோக்கி நகர்த்தும் தமிழினம் உள்ள வரை மறவாமல் ஒவ்வொரு நெஞ்சத்திலும் நிலைக்க வேண்டிய ஒரே பெயர் முள்ளிவாய்க்கால் ஆகவே வார்த்தைகளைத் தடுத்தாலும் உணர்வுகளை.

மழுங்கடிக்க முடியுமா? நிச்சயம் ஒரு நாள் இலட்சியம் வெல்லும் ஆத்மாக்களின் எண்ணம் அழிந்து விடப் போவதில்லை.

# இந்திய இராணுவத் தளபதியாக தல்பீர் சிங் நியமனம் மத்திய அரசு அவசரப்படுவதாக பாஜக கண்டனம்



இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்திய இராணுவத்தின் 53வது டிவிசனின் ஒரு கொம்பனிக்கு கட்டளை அதிகாரியாக செயற்பட்ட, லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுஹக் இந்திய இராணுவத்தின் அடுத்த தளபதியாக நியமிக்கப்படவுள்ளார். லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக் 1987ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்திய அமைதிப்படையின் ஒப்பரேசன் பவான் நடவடிக்கையில் கூர்க்கா படைப்பிரிவுக்குத் தலைமையேற்று முக்கிய பங்காற்றியவர்.

போரின் தொடக்கத்தில் இவரது படைப்பிரிவு, கட்டளை அதிகாரி மற்றும் கொம்பனி தளபதி உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட படையினரை இழந்திருந்தது. அப்போது, டேராடூனில் இருந்த லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக், 24 மணிநேரத்தில் போர்முனைக்கு விரைந்து சென்று போரை வழிநடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய இராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக தல்பீர் சிங் சுஹாக்கை மத்திய அரசு நேற்று நியமனம் செய்துள்ளது. பாஜகவின் கடும் எதிர்ப்பையும் மீறி அரசு இந்த நியமனத்தைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது துணைத் தலைமைத் தளபதியாக உள்ள தல்பீர் சிங் சுஹாகின் பெயரை புதிய இராணுவத் தலைமைத் தளபதி பதவிக்கு, பாதுகாப்பு அமைச்சகம் திங்கள்கிழமை பரிந்துரை செய்தது. இதற்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான உயர் அதிகாரிகள் நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. தல்பீர் சிங் நியமனத்துக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இராணுவத் தலைமைத் தளபதியாக உள்ள விக்ரம் சிங்கின் பதவிக்காலம் ஜுலை 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து நாட்டின் 26-வது இராணுவத் தலைமைத் தளபதியாக தல்பீர் சிங் பதவி ஏற்க உள்ளார். ராணுவத் தலைமை தளபதி பதவியில் தல்பீர் சிங் 30 மாதங்கள் வரை நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விக்ரம் சிங்கின் பதவிக்காலம் முடிவடைவதற்கு 3 மாதங்களுக்கு முன்பே அந்தப் பதவிக்கு தல்பீர் சிங்கின் பெயரை மத்திய அரசு தேர்ந்தெடுத்தது. 2 மாதங்களுக்கு முன்புதான் புதிய தலைமைத் தளபதியை தேர்ந்தெடுப்பது பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மக்களவைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதால் புதிய இராணுவத் தலைமை தளபதியின் பெயரை அறிவிக்க தேர்தல் ஆணையத்திடம் மத்திய அரசு ஒப்புதல் கேட்டது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சிக் காலம் முடிவடையும் தருவாயில் உயர் பதவிக்கான நியமனங்களை செய்யக் கூடாது என்று பாஜக வலியுறுத்தி வந்தது.

இந்நிலையில் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு திங்கள்கிழமை முடிவடைந்தையடுத்து, தல்பீர் சிங் நியமனத்துக்கு தேர்தல் ஆணையம் அனுமதி அளித்தது. இதையடுத்து ராணுவத் தலைமைத் தளபதியாக தல்பீர் சிங் சுஹாக்கை மத்திய அரசு செவ்வாய்க்கிழமை நியமித்தது. இதேவெளை, யாரை பாதுகாப்பதற்காக இராணுவத் தலைமைத் தளபதி நியமனத்தில் மத்திய அரசு அவசரம் காட்டி வருகிறது? என்று இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதியும், காஜியாபாத் தொகுதியின் பாஜக வேட்பாளருமான வி.கே. சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

தல்பீர் சிங் நியமனம் குறித்து வி.கே. சிங் கூறுகையில், இராணுவத் தலைமைத் தளபதியை நியமிக்கும் விவகாரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அவசரம் காட்டுவது ஏன்? பாதுகாப்பு அமைச்சகமும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும் எதைக் கண்டு பயப்படுகிறார்கள்? யாரை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இப்படி செய்கிறார்கள்?

# பிள்ளைகளுடன் பிச்சை எடுப்பது அதிகரித்துள்ளது உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு



இரயில் மற்றும் பஸ் போன்ற பொது போக்குவரதது சாதனங்களில் பிள்ளைகளை தம்முடன் தூக்கி சென்றும், பிள்ளைகளை பற்றி கூறியும் பிச்சை எடுப்பது அதிகரித்துள்ளதாக உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக சட்டங்கள் பரவல்படுத்த வேண்டும் எனவும் குழந்தைகளை தூக்கி சென்று பிச்சை எடுப்பது அவர்களை விற்பனை செய்வதற்கு ஈடானது எனவும் அந்த அமைப்பின் தலைவி சமன்மலி குணசிங்க தெரிவித்தார்.

சமூகத்தில் பெரும்பாலான மக்களுக்கு வருமானம் ஈட்டும் உரிய வழிகள் இல்லை என்பதால், பல பெற்றோரும் நபர்களும் நாளாந்த வாடகை அடிப்படையில் பிச்சை எடுப்பவர்களிடம் குழந்தைகளை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதனால் பிள்ளைகளை சுமந்து கொண்டு பிச்சை எடுப்பது அதிகரித்துள்ளது. பிள்ளைகளை காட்டி பிச்சை எடுப்பவர்களுக்கு எதிரான சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் குணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# கச்சத்தீவு தொடர்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இந்திய படையதிகாரி மறுப்பு

பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து கச்சத்தீவை மீண்டும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையை, இந்திய கரையோர காவல்துறையின் வைஸ் அட்மிரல் அனுரக் ஜி தாப்லியால் நிராகரித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் தாம் கருத்துக்கூற விரும்பவில்லை என்று அவர் இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இது ராஜதந்திர விடயமாகும். எனவே அதற்கு படைத்தரப்பை சேர்ந்த தம்மால் பதில் கூறமுடியாது. எனினும் கச்சத்தீவு விடயத்தில் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது என்று தாப்லியால் தெரிவித்துள்ளார்.

மண்டபத்தில் வைத்து நேற்று செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர், கச்சத்தீவில் இலங்கை கடற்படையினர் முகாமை அமைப்பதாக தமக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் கரையோரம் பாதுகாப்பாகவே உள்ளது. அத்துடன் இந்தியா எந்தநேரமும் பாதுகாப்பு விடயத்தில் விழிப்பாக இருப்பதாக வைஸ் அட்மிரல் அனுரக் ஜி தாப்லியால் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை

## அருள் நிறைந்தவள் அன்னைமரியா



பரிசுத்த ஆவியின் வல்லமையால் தாய்மைப் பேற்றினை அடைந்த மரியாள் தனது மகனின் வாழ்வோடு தன்னை முற்றிலும் இணைத்து, தாய்மையின் முழுமையை நோக்கி முன்னேறினாள். தனது விருப்பு வெறுப்புக்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி மகனின் மீட்பு அலுவலில் தன்னை இணைத்து கொள்கிறாள். கிறிஸ்துவின் பிறப்பில் தொடங்கிய அவளது தாய்மை அவரது சிலுவை மரணம் வரை தொடர்ந்து, ,ன்றுவரை எம்முடன் பயணிக்கிறது. இன்று எமது சமுதாயத்தில், நாட்டில், உலகில் வாழும் அனைத்து பெண்களுக்கும் முன்னுதாரணமாக தாய்மை என்னும் உயரிய கொடையின் மணிமுடியாக திகழ்பவள் புனித கன்னிமரியாள் என்றால் மிகையாகாது.

அன்று இஸ்ராயேல் சமுதாயத்திலும் இஸ்ராயேல் மக்களை சுற்றி வாழ்ந்த மக்கள் மத்தியிலும் காணப்பட்ட பெண்ணடக்கு முறைகள், ஆணாதிக்கம் என்புவற்றின் மத்தியிலும் புரட்சிப் பூபாளம் ,சைக்கும் வீர நங்கையாக, பெண்மைக்கும் தாய்மைக்கும் இலக்கணம் தந்தாள் அன்னை மரியாள். அன்று பல்வேறு அழிவுகளின் மத்தியிலும் அந்நிய ஆதிக்கங்களிலும் நின்று இஸ்ராயேல் மக்களைக் காத்த பெருமை அன்றை வீரப் பெண்மணிகளான தெபோரா, யுதித், எஸ்தர் போன்றோரையும் சாரும். அவர்கள் வரிசையில் இஸ்ராயேல் மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகிற்கும், தாய்மைக்கு இலக்கணம் தந்தவர் கன்னிமரியாள். இவ்வுலகிற்கு மட்டுமல்ல விண்ணுலகிற்றும் அதைக் கொண்டு சென்றாள் அன்னை என்பதை அவளது மாண்புறு விண்ணேற்பு எமக்கு எடுத்துரைக்கிறது.

அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே (லூக் 1:28) என்ற வார்த்தைகள் அன்னையின் புனிதத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அன்னை மரியாள் இறைவனிடம் இருந்து பெற்ற மாபெரும் அழைப்பு இறைவனின் தாயாகும் அற்புத நிலை. இறைவனின் அழைப்புக்கு மரியாளின் கீழ்ப்படிதல், தனக்கு வரப்போகும் அனைத்து துன்பங்களையும் எண்ணாது இறைவனே எல்லாம் என்று இறைவனில் அவள் கொண்ட நம்பிக்கை, பாலகனைப் பெற்றெடுத்த நாள் தொடக்கம் அவள் இம்மண்ணில் அனுபவித்த துன்பங்கள், அவற்றின் மத்தியிலும் ,றைவனை தன்னில் வாழ்ந்த வாழ்வு என்பன மரியாளின் தாய்மையை எமக்கு விளக்குகின்றன.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி**


# இந்தியாவில் உளவு பார்த்த இலங்கையருக்கான தடுப்புக்காவல் நீடிப்பு

பாகிஸ்தான் புலனாய்வு பிரிவுக்காக இந்தியாவில் உளவுப்பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரின் தடுப்புக்காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

சென்னை நீதிமன்றம் நேற்று அவருக்கான தடுப்புக்காவல் தண்டனையை 15 நாட்களுக்கு நீடித்தது 37 வயதான இலங்கையரான சகீர் ஹுஸைன் என்பவர் நேற்று வீடியோ மாநாடு மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் சிறையில் உள்ள கைதி ஒருவருக்காக இந்த வீடியோ மாநாடு ஆஜர் முறை பயன்படுத்தப்படுகிறது என்று உதவி அரச சட்டத்தரணி எஸ. திராவியராஜ் மன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரத்துக்காக ஹுஸைன் இந்தியாவில் உளவாளியாக செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்

# 16 நூற்றாண்டுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட "இரத்த காட்டேரி"



போலந்தில் 16ம் நூற்றாண்டில் புதைக்கப்பட்ட காட்டேரியின் எலும்பு கூடுகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. போலந்தின் கமியன் பொமெர்ஸ்கி என்ற இடத்தில் இந்த இரத்த காட்டேரியின் எலும்புக்கூடு கண்டு பிடிக்கபட்டுள்ளது.

இந்த எலும்பு கூடு 16ம் நூற்றாண்டை சேர்ந்தது என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. இது டவுன் தேவால யத்தின் அருகில் உள்ள சுடுகாட்டில் புதைக்கப்பட்டுள்ளது.

இது இரத்தம் குடிக்காமல் இருப்பதற்காக, இதன் வாயில் கல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆராய்ச்சியாளர்களின் தலைவர் கூறுகையில், இவ்வாறு நிறைய எலும்புக் கூடுகள் கடந்த 13 17ம் நூற்றாண்டில் புதைக்கப்பட்டுள்ளது என்றும் அது புதைக்கபட்டபின் மீண்டும் எழுந்து வராமல் இருக்க இரும்பு அல்லது மர கட்டைகளை வைத்து கட்டப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இன்று

**வைகாசி - 1 வியாழகிழமை 15.05.2014**

திதி: பிரதமை மு.இ 11.49
நட்சத்திரம்:விசாகம் மு.ப 7.17

சுப நேரம்:7.23 - 8.53 வரை
இராகு காலம்:1.23 - 2.53 வரை
எமகண்டம்: 5.53 - 7.23 வரை



# இன்றைய பலன்

15.05.2014

## வழங்கியவர் மணிகண்டன்




இன்று, உங்கள் நலம் விரும்புபவரிடம், வெகுநாள் முன் வைத்த கோரிக்கை நிறைவேறும். மகிழ்ச்சியுடன் அன்றாட பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு விரும்பிய உணவு வகை உண்டு மகிழ்வீர்கள்.




இன்று, உங்கள் நண்பர்களிடம் கலை உணர்வுடன் பேசி மகிழ்வீர்கள் வாழ்க்கை தரம் உயர, புதிய அனுகூல வாய்ப்பு உருவாகும் உத்வேகமுடன் உழைத்து, தொழில் வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.




இன்று, உங்கள் உடல் நலத்தை பாதுகாப்பதில் முக்கிய கவனம் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரம் சீராக, சில மாற்றங்கள் உதவும். சிலரிடம் கேட்டிருந்த பணக்கடன், அதிக நிபந்தனையின் பேரில் கிடைக்கும்.




இன்று, சிலரது செயல் மனவருத்தம் தரலாம். அன்றாட பணிகளை செயல்படுத்துவதில், குளறுபடி தாமதம் இருக்கும். கூடுதல் பொறுமை பின்பற்றி, தொழில் இலக்கில் குறிப்பிட்ட அளவை அடைவீர்கள் மாமன், மைத்துனரின் உதவி எதிர்பார்த்த வகையில் வந்து சேரும் வாகன பயணத்தில், மித வேகம் பின்பற்றுவது நல்லது.




இன்று, உங்கள் மனதில் புத்துணர்வும், செயல்களில் திறமை அதிகரிக்கும். நிலுவையில் இருந்த பணிகளை நினைவு நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவா பணபரிவர்த்தனை முன்னேற்றம் தரும். குடும்ப உறுப்பினர் விரும்பிய பொருட்களை வாங்கித்தர தாராள பணச்செலவு செய்வீர்கள்.




இன்று, உங்களிடம் பழகுகிற சிலர், தவறான ஆலோசனை சொல் உங்களின் சுயமான செயல்பாடு மட்டுமே, தகுந்த வெற்றியை தொழில், வியாபாரம் வளர்வதற்கு கிடைத்த புதிய வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். குடும்ப செலவுகளுக்கு, தாராள அளவில் செலவு செய்வீர்கள். இஸ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.




இன்று, எதிரி உங்களுக்கு செய்கிற கெடுதல் முயற்சி, பலம் இழந்து போகும். இஷ்ட தெய்வத்திற்கு நன்றி சொல்லி, அன்றாட பணிகளை உத்வேகத்துடன் துவங்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும் பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.




இன்று, மனதில் சுய கௌரவ சிந்தனை அதிகரிக்கலாம். தொழில் உருவாகிற மாறுபட்ட சூழ்நிலையை சரி செய்வது நல்லது. குறைந்த அளவில், பணம் வரவு இருக்கும். குடும்ப உறுப்பினர், கூடுதல் செலவுக்கு இயன்ற அளவில் உதவுவர். சீரான ஓய்வு, உடல் நலத்தை பாதுகாக்கும்.




இன்று வெகுநாள் சிந்தித்த திட்டங்களை செயல்படுத்த முயற்சிப்பீர்கள். நண்பர், உறவினர்களின் ஆதரவு பலமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் அபிவிருத்தி செய்ய, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். நிலுவைப் பணம் எளிதில் வசூலாகும் பணியாளர் நல்ல முறையில் செயல்பட்டு பாராட்டு, வெகுமதி பெறுவர்.




இன்று, உங்கள் நற்செயல்களால், பிறர் பாராட்டுகிற நன்மதிப்பை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். சராசரி பணவரவுடன், உபரி வருமானம் கிடைக்கும் உறவினர் செய்த உதவிக்கு, பிரதி உபகாரம் செய்வீர்கள். சகதொழில் சார்ந்த நண்பருடன், முக்கிய பேச்சு வார்த்தை இருக்கும்.




இன்று, உங்கள் தன்மானத்திற்கு சோதனை வரலாம். மனதில் பொறுமை, நேர்மை குணங்களை பின்பற்றுவது நற்பலன் பெற உதவும் தொழில், வியாபாரத்தில் போட்டி, அதிகரிக்கும். பணவரவின் தன்மைக்கு ஏற்ப, செலவுகளை குறைத்து கொள்வீர்கள். ஒவ்வாத உணவு வகையை தவிர்ப்பது நல்லது.




இன்று, உங்களின் செயலை சம்பந்தம் இல்லாதவர், குறை சொல்லும் சூழ்நிலை ஏற்படலாம். பொறுமை அவசியம். தொழில், வியாபார வளர்ச்சி பெற கூடுதல் பணி தேவைப்படும். முக்கிய செலவுகளுக்கு பயன்படுகிற வகையில் பணவரவு கிடைக்கும். உடல் நலம் சீராக தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வீர்கள்.

# சிந்திக்க சில வரிகள்

**கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே**
**அது உன்னை கொன்றுவிடும்**
**கண்ணை திறந்து பார்**
**நீ அதனை வென்று விடலாம்**

**- அப்துல் கலாம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மேலும் காணிகளை ஆக்கிரமிக்கும் கடற்படை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் 186 ஏக்கர் நிலப்பரப்பு கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - கீரிமலை பகுதியில் கடலோரமாக இந்த நிலப்பரப்பு கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படுவதாக, வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.
கீரிமலையில் இரண்டு பிரதேசங்களாக இந்த காணி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வலிகாமத்தில் 6000க்கும் அதிக அளவான காணிப்பகுதியை ஆக்கிரமித்துள்ள பாதுகாப்பு தரப்பினர், அதனை தொடர்ந்தும் பாதுகாப்பு வலயங்களாக பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



2014.05.11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிகல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் உடற்பயிற்சி அணி போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வெற்றி பெற்று, தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் யாழ்.மாவட்ட சம்பியனாக வந்து சாதனை படைத்துள்ளது. அணி வீரர்களின் குழுப்படம் இணைக்கப்பட்டுள்ளது.

# யாழில் இளம் பெண் மீது வாள்வெட்டு

(கொழும்பு)
இனந்தெரியாத நபர்கள், இளம்பெண்ணொருவரை வாளால்வெட்டிய சம்பவமொன்று இன்று யாழில் இடம்பெற்றுள்ளது. இன்று பிற்பகல் நுணாவில் மேற்கு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த தர்சிகன் சாந்தினி(வயது 27) என்ற குடும்ப பெண் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த பெண் தனது வீட்டுவளவில் நின்றவேளை, அங்கு திடீரென வந்தவர்கள் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து, படு காயமடைந்த அவர், சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதுதொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்திரசிறியை மாற்றவேண்டாம் ஏக விசுவாசத்தில் சமுர்த்தி அலுவலர்கள்



வடமாகாண ஆளுனர் சந்திரசிறியின் பதவிக்கு மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளிவந்திருந்தன.
வடமாகாண தேர்தல் நிறைவடைந்த பின்னர் இராணுவ ஆளுனர் சந்திரசிறியை அகற்றி, சிவிலியன் ஒருவரை ஆளுனராக நியமிக்கும்படி பல்வேறு தரப்புகளிடமிருந்தும் கருத்துக்கள் வேண்டுகோள்கள் வெளிவந்திருந்தபோதும், அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

இந்த நிலையில் பொலிஸ் தரப்பை சேர்ந்த ஒருவரை அரசாங்கம் வடமாகாணசபை ஆளுனராக நியமிக்கப் போவதாக தகவல்கள் வெளிவந்த நிலையில், அதற்கும் பலத்த எதிர்ப்புகள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் வடக்கில் ஆளுனர் சந்திரசிறியை மாற்ற வேண்டாமென கோரி சமுர்த்தி உத்தியோகத்தர்களை பயன்படுத்தி கிராமங்களுக்குள் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வடமாகாணசபை தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற வேண்டும் என்ற நப்பாசையில் தகுதியடிப்படைகளை புறக்கணித்தும் சமுர்த்தி நியமனங்களை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களில் சிலர் கிராமங்களுக்குள் ஈ.பி.டி.பியின் மற்றும் அரசாங்கத்தின் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களாக இனம் காணப்படுகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வவுனியாவில் இறைச்சியில் புழு!

வவுனியா சந்தை உள்வட்ட வீதியில் உள்ள இறைச்சி கடையொன்றில் மாட்டிறைச்சியை ஒருவர் கொள்வனவு செய்து தனது வீட்டிற்கு கொண்டு சென்று பார்வையிட்ட போது அதனுள் சிறிய புழுக்கள் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து இறைச்சியுடன் கொள்வனவு செய்தவர் வவுனியா சுகாதார வைத்திய பணிமனைக்கு சென்ற போது பொது சுகாதார பரிசோதகர்கள் பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு உள்ளமையினால் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்ய சென்றபோது வவுனியா பொலிஸார் இது தொடர்பாக பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யுமாறு பணிக்கவே சம்பந்தப்பட்ட நபர் பிரதேச செலயகத்திறகு சென்று முறைப்பாடு செய்த போதிலும் அவர்கள் மீண்டும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர் புழுக்கள் நிறைந்த இறைச்சியுடன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மீளவும் சென்று முறையிடவே அவர்கள் கடிதமொன்றனை வழங்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் பொது சுகாதார பரிசோதகர்கள் தொடர்ச்சியாக பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் புழுக்கள் நிறைந்த இறைச்சி தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

# வலி.வடக்கு மக்களுக்கு மாற்றுக்காணி வழங்க அரசாங்கம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)
வலி. வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும் மக்களுடைய காணிகளுக்கு பதிலாக வளலாய் பகுதியில் மாற்றுக் காணிகளை வழங்கி அந்த மக்களை அங்கு குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக வளலாயில் குடியேறும் மக்களின் வலி.வடக்கு ஆக்கிரமிப்பு பகுதிகளில் உள்ள காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார். இந்த மதிப்பீட்டின் பிரகாரம் நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, வளலாய் பகுதியில் ஏற்கனவே குடியிருக்கும் 52 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அங்கு இருக்க முடியாமல் அங்கிருந்து வெளியேறிவரும் நிலையில் வலி.வடக்கு மக்கள் எவ்வாறு அங்கு குடியிருப்பதென வலி.வடக்கு மீள்குடியேற்ற குழு தலைவர் ச.சஜீவன் கேள்வி எழுப்புகிறார்.

அரசினதும் அரச அதிகாரிகளினதும் வலி. வடக்கு மக்களை ஏமாற்றும் செயற்பாட்டுக்கு யாரும் துணை போகக் கூடாது எனவும் அவர் வலியுறுத்துகிறார். வலி. வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் 24 வருடங்களாக தனியார் காணிகளில் உள்ள முகாம்களில் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

போர் முடிந்த பின்னராவது தங்களது காணிகள் மீள கிடைக்கும் என இந்த மக்கள் எதிர்பார்த்திருந்தனர். எனினும் அந்தக் காணிகளை நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் நோக்கில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதற்கு எதிராக வலி.வடக்கு மக்கள் பல போராட்டங்களை முன்னெடுத்தனர். நீதிமன்றங்களில் பல வழக்குகளையும் தாக்கல் செய்தனர். எனினும் எதனையும் பொருட்படுத்தாமல் உயர்பாதுகாப்பு வலையத்திற்குள் இருந்த மக்களுடைய வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், பொது மண்டபங்கள், வியாபார நிலையங்கள் ஆகியன இடித்தழிக்கப்பட்டன.

இதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் வலி.வடக்கில் மீள்குடியேற்றம் என்பதற்கு சாத்தியம் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். மேலும் மக்களுக்கான மாற்றுக் காணிகளை வழங்குவதே அரசாங்கத்தின் திட்டம். அதனையே நடைமுறைப்படுத்துவோம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து வலி.வடக்கில் இருந்த இடம்பெயர்ந்து முகாங்களில் வாழும் மக்களில் மாற்றுக் காணிகள் பெறவிரும்புபவர்கள், நட்ட ஈடு பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுடைய புள்ளிவிபரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

மேலும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மாற்றுக் கிராமம் ஒன்று வளலாயில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக வலி.வடக்கில் உள்ள மக்களுடைய காணிகளையும் அளக்கும் நடவடிக்கைகளையும் துரிதமாக்குமாறு யாழ். மாவட்டச் செயலகத்தினால் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் வைத்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தபட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் வெற்றி அரசாங்கத்துக்கு அல்ல, தமிழர்களுக்கே வடமாகாண கல்வி அமைச்சர்



(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்திற்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சிக் கிளை அங்குரார்ப்பண நிகழ்வு கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் புஸ்பராசா தலைமையில் தருமபுரத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சரின் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இதில் பா.உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம், சு.பசுபதிப்பிள்ளை, வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் தவபாலன் பொன்னம்பலநாதன்,

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான சுரேன், வீரவாகுதேவர், பா.உறுப்பினர் சி.சிறீதரனின் செயலாளரும் கிளிநொச்சி கிழக்கு பிரதேச கட்சி அமைப்பாளருமான பொன்.காந்தன், கண்டாவளை பிரதேசத்தை சேர்ந்த கட்சி முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் என கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கண்டாவளை பிரதேசத்திற்கான கட்சியின் கிளை தெரிவு செய்யப்பட்டதுடன், புதிதாக ஏராளமானோர் கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டனர். கண்டாவளை பிரதேச கிளையின் தலைவராக சி.தவபாலன், செயலாளராக கதிரவேலு வைத்திலிங்கம், பொருளாளராக மயில்வாகனம் சோமசேகரம் ஆகியோரும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பிரதிநிதிகள் கண்டாவளையின் கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்டனர். இங்கு கலந்து கொண்டவர்கள் மத்தியில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றும்போது, கண்டாவளை பிரதேசத்திற்கான கட்சியின் கிளையொன்று அமைந்திருப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி. ஏனெனில் கட்சியின் கோட்டை என்று சொல்லுமளவிற்கு இந்த மக்கள் மாகாணசபை தேர்தலில் எமக்கு வாக்களித்துள்ளனர்.

அதன் காரணமாக அரசாங்க தரப்பால் வீட்டுத்திட்டம், மின்சாரம் போக்குவரத்து போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் கிராமங்கள் சில புறக்கணிப்புக்கு உட்படுவதாகவும் அறிகின்றோம். இந்த நாட்டில் இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஜனநாயக விரோதம் இப்பொழுது சர்வ சாதாரணமானதாகி விட்டது. இந்த நாட்டில் தமிழர்கள் தங்கள் இருப்பை தக்க வைக்க பெரும் பிரயத்தனப்பட வேண்டி இருக்கின்றது. இந்த நாட்டில் சிங்களவர்கள்தான் மூதாதையர்கள் என்றும் பேரின மமதை சொல்கிறபோது. சிங்களவர்கள் இங்கு வருவதற்கு முன்பு ஏற்கனவே இங்கு வாழ்ந்தவர்கள் யார் என்று அவர்களின் வழிபாடு என்ன என்று பார்த்தால் தமிழர்கள் இந்த தீவில் எப்படி அடிமையாக்கப்பட்டுள்ளார்கள் என்பது உணரப்படும்.

அதனால் இங்கு ஒரு நியாயமான உரிமைகளுக்கான கோரிக்கைகள் எழுந்தது. முள்ளிவாய்க்கால் வரைக்கும் நாம் இத்தனை பெரும் அர்ப்பணிப்புக்களை செய்வதற்கு தூண்டியது. இந்த நிலத்தில் எமது இனம் ஆழ பதித்திருக்கும் வேர் தானே அன்றி வேறொன்றும் இல்லை.மே 18 வெற்றியை கொண்டாட வேண்டியர்கள் நாங்கள்தான் சிங்களவர்கள் அல்ல எமது இனத்தின் விடிவுக்காக இத்தனை அர்ப்பணப்புக்களை செய்து எமது இனத்தின் சுதந்திர தாகத்தை ஜெனிவாவரை கொண்டு சென்று தெரியப்படுத்திய வெற்றிக்கு உரியவர்கள் நாங்கள்தான்.

சிங்களவர்கள் அல்ல. எனவே சிங்களவர்கள் எங்களுடைய வெற்றியை கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். அது தமிழர்களுடைய வெற்றிநாள் என்பதை நிச்சயம் காலம் வெகுவிரையில் இந்த அரசாங்கத்தை சார்ந்தவர்களுக்கு கற்றுத்தரும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் எதிர்காலம் என்ன ?

நம்பிக்கைகளுக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் இடையில் அகப்பட்டு நிற்கின்றது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம். தமிழர்களின் அரசியல் இலக்குகளை வெற்றி கொள்ளக் கூடிய தளமாக விளங்கும் புலத்தின் மீதான கவனத்தை இலங்கை அரசாங்கம் கூர்மைப்படுத்தியுள்ளதை அண்மைய நகர்வுகள் மூலம் தெளிவாக உணர முடிகின்றது.

புலத்தில் செயல்படும் முக்கிய தமிழ் அமைப்புகளையும் தமிழ் பிரதிநிதி களையும் தடை செய்வதான அறிவிப்பின் பின்னால் உள்ள அரசியல் மிகவும் நுட்பமானது.

இது புலத்தில் வாழும் சாதாரண தமிழ் மக்களை குழப்பிவிடும் ஒரு உத்தியாகவே நோக்கப்பட வேண்டும். தற்போது தீவிரமாக அரசியல் செயல் பாடுகளை மேற்கொண்டுள்ள முக்கியமா னவர் களின் பெயர்களை கொண்டிராத இலங்கை அரசாங்கத்தின் பெயர் பட்டியல் சாதாரண பொது மகனுக்கு குழப் பங்களை உண்டு பண்ணிவிடும் நோக்கிலேயோ வெளியிடப்பட்டுள்ளது.

எவரையும் எதற்கும் நம்பமுடியாத நிலைக்கு புலம் பெயர் தமிழர்கள் தள்ளப்படுவார்கள்.

சாதாரணமாகவே தமிழ் மனநிலை கொண்ட தமிழர்கள் இது தான் சமயம் ஏன்று போராட்ட மனநிலைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு சாதாரண வாழ்கை முறைக்குள் தமது வாழ்வை அடைத்துக் கொள்ள முற்படுவார்கள்.

இது தான் இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டும் புலத்தில் உள்ள தீவிர செயல்பாடுகளை கொண்ட தமிழர் அமைப்புகளை தமிழ் மக்களிடம் இருந்து பிரிப்பது பின்னர் அவர்களை பயங்கரவாத அமைப் புகளாக்கி உலக நாடுகளில் தடை செய்வது.

இது இப்போது தீவிரமடைந்துள்ள சர்வதேச நாடுகளை இலங்கைக்கு எதிராக திருப்பி விடும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் நடவடிக் கைகளை வீரியமிளக்கச் செய்து தன்னை தப்ப வைப்பதற்கான இலங்கையின் ஒரு தந்திரோபாயம்.


மறுபுறம் இந்த தடை குறித்து வெளியிடப்பட்டு வரும் மிகைப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் எச்சரிக்கைகள் என்பன புலம்பெயர் வாழ்கை முறைக்குள் வாழத் தலைப்பட்டுள்ள தமிழரகளை போராட்டங்களில் இருந்தும் அரசியல் நட வடிக்கைகளில் இருந்துள் தள்ளி வைக்கும்.

இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட வர்களாக அறிவிக்கப்பட்ட ஒரு சிலரின் குடும்பத் தினர் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர் அல்லது கடத்தப்பட்டுள்ளனர் என்ற செய்திகள் வெளியாகியுள்ளன. இது தாயகத்தில் வாழும் உறவுகள் குறித்து கரிசனை கொண்டுள்ள புலம் பெயர் செயற்பாட்டா ளர்களை பணிய வைக்கும் ஒரு உத்தி.

இதனை சரியான முறையில் நாம் எதிர் கொண்டால் இலங்கையின் இந்த திட்டத்தை முகத்தில் அறைந்து முடித்து வைக்க முடியும். தடை செய்யப்பட்ட தமிழர்கள் தமது உறவி னர்களுக்கு இலங்கையில் அச்சுறுத்தல் என்பதை தமது நாடுகளின் அரசாங்கங்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

எல்லோரும் ஒன்றாக சென்று முறைப்பாடுகளை பதிவு செய்ய வேண்டும். இது இலங்கை மீதான அழுத்தங்கள்ள அதிகரிக்கும். ஆனால் நாம் ஒன்றாக போவதா ? அவர் வந்தால் நான் வரமாட் டேன் அவர் பேசும் மேடையில் என் மூச்சுக் கூட படாது அவர் துரோகி நான் தியாகி என்று விறைப்புக் காட்டும் நாங்கள் இதற்கு பின்னரும் இணையா விட்டால் நாம் எல்லோரும் தாயகத்தில் தம்முயிர் தந்த அத்தனை பேராலும் துரோகிகளாய் பார்க்கப்படுவதும் தவிர்க்க முடியாதாகிவிடும்.

2009ம் ஆண்டு மே மாதம் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் கொடுரமான முறையில் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் நம்பிக்கையளிக்கும் களம் ஒன்றை புலம்பெயர் தமிழர்கள் திறந்தார்கள் நடைபெற்று முடிந்த ஈழப்போரில் கொல்லப்பட்ட மக்களினதும் போராளிகளினதும் ஆனமாவாக புலம்பெயர் தமிழர்களின் போராட்டம் முனைப்பு பெற்றது. இது ஆயுதப் போராட்டத்தின் தொடர்சியாக ஈழவிடுதலை நோக்கிய நீட்சியாக பார்க்கப்பட்டது.



இதனை ஒடுக்குவதற்கும் முறியடிப்பதற்கும் ஆயுத பலத்திற்கும் மேலான இராஜதந்திர பலம் இலங்கைக்கு தேவைப்பட்டது.

அதற்கான வழிமுறைகளை அது தேடிக் கொண்டிருந்த போது அதற்கான தேவையில்லை நாமே தருகின்றோம் என்று நாம் முன்னறிவித்து நமக்குள் பகை முரண்களை வெளிப்படையாகவே அறிவிக்கத் தொடங்கினோம்.

துரதிஸ்டவசமாக நாமே நமக்குள் மோதல்களை தோற்றுவித்து எமது பலத்தை சிதைக்க தொடங்கினோம். 2009 முன்னர் ஓரணியாக நின்ற புலம்பெயர் தமிழர் சமூகம் தலைமைத்துவ போட்டி களால் இப்போது சிதறிக்கிடக்கின்றது.

பலமிழந்து போய் நிற்கும் எமக்குள் இன்னும் இன்னும் பிரிவினைகளை ஏற்படுத்தி ஒருபோதும் நாம் இணைய முடியாத படிக்கான நிரந்தர பிழவுகளை உருவாக்கும் நகர்வுகளை இலங்கை அரசு திட்டமிட்டு முன்னெடுக்கின்றது.

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இன அழிவினை சந்தித்த இனத்தின் விழுதுகளான நாம் நடைபெற்று முடிந்த அழிவினை ஒன்று பட்டு நின்று நினைவு கூர முடியாத அளவிற்கு மாறிநிற்கின்றோம். நீயா நானா என்ற போட்டியில் உயிர் நீத்தவர்களின் தியாகங் களை மறந்து போவதற்கும் அவர்களின் தியாகங் களின் பின்னால் நிமிர்ந்து நிற்கின்ற எப்போதும் சாய்ந்து போகாத விடுதலைக் கனவை கானல் நீரால் கழுவிவிடவும் முயல்கின்றோம்.

எமது தேசத்தில் எமது மக்கள் மீது மேற்கொள்ளப் பட்டதும் தற்போது மேற்கொள் ளப்பட்டு வருவதும் திட்டமிட்ட இன அழிப்பு என்பதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதி லேயே எங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளுக்குள் கருத்து மோதல்கள் தோன்று வது எத்தனை தூரம் அவமானத்திற்குரியது என்ப தை நாம் ஒருபோதும் சிந்திக்கவேயில்லை.

எங்கள் மண்ணை அந்த மண்ணை நேசித்த மக்களையும் மறவர்களையும் மூடிப்புதைத்து விட்டு காத்துக்கிடக்கும் முள்ளிவாய்காலின் ஈரம் காய்வதற்குள் நமக்கிடையில் தோன்றி நிற்கும் பிரிவினைகள் தேவை தானா? தேசிய துக்க நாளா? இன அழிப்பு நாளா ? என்ற தலைப்பிற்கான பிரச்சி னைகள் அங்கே யுத்தத்தின் பின்னரும் நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கும் எங்கள் உறவுகளுக்கு எதனை தரப்போகின்றது.

புலம்பெயர் தேசத்தில் வாழும் தமிழர்கள் எமக்கு நேர்ந்த அவலங்களை மீண்டும் மீண்டும் தாம் வாழும் நாடுகளின் காதுகளுக்குள் உரத்துச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இன்று இல்லாவிடினும் என்றேனும் ஒரு நாள் அவர்கள் எங்கள் பிரச்சினை என்ன என்பதை கேட்பதற்கும் அதற்கு தீர்வு வழங்குவதற்கும் முன்வந்தேயாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ இப்போது எமது விடுதலை நோக்கிய பயணத்தின் துணையாக நாம் சர்வதேசத்தை வரித்துக் கொண்டு விட்டோம்.

இப்போது இருப்பதில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறை சர்வதேசத்தின் துணையோடு எமது விடுதலையை வென்றெடுப்பதாகவே இருக்கின்றது.

எம்மீது இன அழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.. எமது நிலங்கள் திட்டமிட்ட வகையில் ஆக்கிரமிக்கப் படுகின்றன.. எமது மக் களின் வாழ்வு மோசமான நிலைக்கு தள்ளப்படு கின்றது எமக்கான அதி காரங்களை நாம் பெற்றுக் கொள்வதே எமக்கு தீர் வாகும் என்பதை நாம் மீண் டும் மீண்டும் சர்வதேசத் திற்கு உரத்துச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

மார்ச் மாதத்தில் வரும் ஜெனீவா மாநாட்டின் காச்சல் தீர்ந்த பின் மீண்டும் ஒரு ஜெனீவா மாநாட் டிற்காக காத்திருப்பதும் அதற்கிடையில் கிடைக் கின்ற சந்தரப்பங்களை எல்லாம் எமக்கிடையிலான




மோதல்களுக்கான களங்களாக பயன்படுத்திக் கொள்வதும் ஆரோக்கியமான மாற்றங்களை எமக்கு தரப் போவதில்லை.

மீண்டும் ஒரு மே மாதம் வருகின்றது உலகத்தில் வாழும் தமிழர்கள் எல்லோரும் ஒன்றாக இணைந் தால் எழுகின்ற குரல் பலமாக இருக்கும் எதிரிக்கு பயமாகவும் மாறும்.

ஒரு நாட்டில் நான்கு இடங்களில் நினைவு நிகழ்வுகளை நடத்தி விட்டு எனக்குத் தான் அதிக ஆதரவு இல்லை எனக்கு தான் என்று ஆட்கணக்கு பார்ப்பதில் பலனில்லை என்பது உணர்வோம்.

எமக்கிடையில் ஒருமை ஏற்படாமல் இருப்பதற்கான வேலைகளை மிக நுட்பமாக செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்கின்றது. எமது மக்களின் கவனங்களை கவலைகளை திருப்பு வதற்கும் திட்டங்கள் போடப்படுகின்றன. இவற்றை தாண்டுவதற்கும் தகர்பதற்கும் எமக் குள்ள ஒரே வழி நாம் ஒன்றாய் எழுவது மட்டும் தான்.

நம்பிக்கைகளுக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் இடையில் சிக்கிக் கிடக்கின்ற தமிழினம் விடுதலை பெறுவதற்கு நாம் செய்ய வேண்டியது இது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது எதிர்க்கட்சி வேட்பாளருக்கு அநுரகுமார திஸாநாயக்கவே பொருத்தமானவர்

## தயான் ஜயதிலக்க

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட, பொது வேட்பாளராக ஜே.வி.பீயின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவை தெரிவு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இலங்கையின் முன்னாள் ராஜ தந்திரி தயான் ஜயதிலக்க தமது கட்டுரை ஒன்றில் இந்த யோசனையை முன் வைத்துள்ளார்.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 2016 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற போதிலும் அதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்த மஹிந்த ராஜபக்ச ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் இருந்து வரும் ஆதரவு குறைந்து வருகிறது. இதனை சரி செய்வதற்கு தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அரசாங்கத்திடம் திட்டம் எதுவும் இல்லை. எனவே ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் அதில் பெறப்படும் வெற்றியை கொண்டு அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றிபெற முடியும் என்று ஜனாதிபதி எண்ணம் கொண்டிருப்பதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி தேர்தல் முதலிலேயே நடத்தப்படவுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட ஜே.வி.பியின் புதிய இளம் தலைவராக பொறுப்பேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்க, லத்தீன் அமெரிக்காவில் செயற்பட்ட புரட்சிகர குழுவின் சிந்தனைகளை தோற்றுவிக்க முடியும் என்று தயான் ஜெயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பொறுத்தவரை முதலாளித்துவ ஆட்சிமுறை இடதுசாரி ஆட்சி முறைக்கு மாற்றம் பெறவேண்டும். இதன்போதே அழிந்துக்கொண்டிருக்கும் நாட்டை சீரமைக்க முடியும் என்று ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

# 120 கோடி ரூபா பெறுமதியான விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் பறிமுதல்

(கொழும்பு)
120 கோடி ரூபா பெறுமதியான தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இந்த சொத்துக்களை மீட்டுள்ளனதாக செய்தி வெளியிட்டுள்ளது.

போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் புலிகள் சொத்துக்கள் பாரியளவில் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. வெள்ளவத்தை பிரதேசத்தில் சொகுசு தொடர் மாடி வீடுகள், கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகாமையில் காணிகள், ஆடைக் கைத்தொழிற்சாலைகள், இரண்டு அச்சகங்கள், ட்ரோலர் படகுகள் மற்றும் தொடர் பாடல் சாதனங்கள் இவ்வாறு மீட்கப் பட்டுள்ளன.

இந்த சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் எப்போது கைப்பற்றப்பட்டன என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# இனங்காணப்படாத இரண்டு சடலங்கள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)
கொஸ்கம மற்றும் மீகாஹட்டென்ன பகுதியில் இனங்காணப்படாத இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் இன்று தெரிவித்தனர். மீகாஹட்டென் பகுதியில் உள்ள மயானம் ஒன்றுக்கு அருகில் மீட்கப் பட்ட சடலம் எரியுண்ட நிலையில் காணப்பட்டது.

ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நாகொட வைத்தியசாலையில் பிரேத அறையில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

அதேவேளை கொஸ்கம -பூகொட வீதியில் முன்னதாக மீட்கப்பட்ட சடலம் உரப் பையில் கட்டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# நீர்கொழும்பில் கொள்ளைகளை தடுக்க புதிதாக கழுகு படையணி

நீர்கொழும்பு நகரில் தொடர்ந்து இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களை காரணமாக கழுகு என்ற பெயரில் பாதுகாப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கழுகு என்ற பெயரில் விசேட படையணி ஏற்படுத்தப்பட்டு, பஸ் நிலையத்தின் இரண்டாவது மாடியில் நகரை பாதுகாப்போம் கருப் பொருளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கி ஏந்திய 50 பாதுகாப்பு அதிகாரிகள் அதில் இணைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வேன்களில் கழுகு 1 மற்றும் கழுகு 2 என்று பெயரிடப்பட்டு ரோந்து பணியிலும் ஈடுபட்டுள்ளன.

# சீன உயர் படையதிகாரிகள் குழு இலங்கை விஜயம்



(கொழும்பு)
ஜெனரல் க்யூ குயிலங் தலைமையிலான சீன படையதிகாரிகள் குழுவொன்று நேற்று இலங்கை வந்தடைந்துள்ளது. சீன படைக்குழுவினரை, இலங்கையின் முப்படைத் தளபதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ஜெனரல் க்யூ குயிலங் சீன கம்யூனிஸ் கட்சியின் அரசியல் குழுவின் உறுப்பினர் என்பதுடன் அதன் மத்திய இராணுவ ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமாவார். 1950 ஆண்டு மார்ச் மாதம் சாங்டோங் மாநிலத்தில் பிறந்த அவர் ஹன் என்ற இனத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன மக்கள் இராணுவத்தில் 1966 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட அவர், 1967 ஆம் ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து கொண்டார். இவர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு கம்போடியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகியவற்றின் அழைப்பின் பேரில் மூன்று நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளதுடன் இறுதிக்கட்டமாக இலங்கை வந்துள்ளது.

இந்த குழுவினர் திருகோணமலையில் உள்ள விமானப்படை கலாசாலை மற்றும் கடற்படை கலாசாலைக்கும் விஜயம் செய்ய உள்ளனர். அத்துடன் கண்டி தலதா மாளிகை, கொழும்பு துறைமுகம், கட்டுநாயக்க விமானப்படைத் தளம் ஆகியவற்றும் விஜயம் மேற்கொள்ள உள்ளனர்.

சீன படையதிகாரிகள் குழு, ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படை மற்றும் பொலிஸ் தலைமை அதிகாரிகளையும் சந்திக்க உள்ளனர்.

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள கடற்படை மற்றும் விமானப்படை கலாசாலைகளுக்கு இன்று விஜயம் செய்யும் இலங்கை விமானப்படைத் தலைமைக் கலாசாலையில் இரவு விருந்துபசாரம் அளிக்க உள்ளார்.

# கட்டுநாயக்க விமான தளத்துக்கு மாற்றாக மத்தள அமையவில்லை - ஆர்.யோகராஜன்

(கொழும்பு)
இலங்கையில் மத்தள விமானத்தளம் உரிய இடத்தில் அமைக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தி யுள்ளது. சர்வதேச விமான நிலைய ஒழுங்குகளை மீறியே இந்த விமானத்ளம் அமைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச விமானங்கள் தரையிங்குவதற்கான இரண்டாவது தளமாக மத்தள இருந்திருக்க வேண்டும். கட்டுநாயக்க விமானத்தளம் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி வலயத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தநிலையில் தென்மேல் பருவப்பெயர்ச்சி காலநிலையின்போது சீரற்ற நிலை தோன்றுமானால் மத்தள விமானத்தளத்தில் விமானங்களை தரையிறக்க முடியாது.

ஏனெனில் அந்த விமானத்தளமும் தென்மேல் பருவப்பெயர்ச்சி வலயத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 209 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட மத்தள விமானத்தளம் கட்டு நாயக்கவுக்கு மாற்று தளமாக அமையப் பெறாதது துரதிஷ்டவசமானது என்றும் யோகராஜன் குறிப்பிட்டுள்ளார்

# புலம்பெயர் தமிழர்களை தடைசெய்த நடவடிக்கை குறித்து கவனம் செலுத்தப்படுகிறது பிரித்தானியா

(கொழும்பு)
நாட்டுக்கு வெளியில் இயங்கி வரும் தமிழ் அமைப்புக்களை தடைசெய்தமை தொடர்பில் பிரித்தானியா தமது கவனத்தை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் வெளியுறவு அலுவலக அமைச்சர் ஹுகோ ஸ்வையர் இது தொடர்பில் விடுத்துள்ள கருத்தில் போதிய சாட்சியங்கள் இருக்குமானால் இலங்கை அரசாங்கம் தனிப்பட்டவர்களுக்கு எதிராக தடைவிதிக்கமுடியும் என்ற உரிமையை மதிப்பதாக குறிப்பிட்டுள்ளார்

இந்த தடையைக்கொண்டு இலங்கை அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை கட்டுப் படுத்த நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்று பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கூறியிருப்பதையும் ஸ்வையர் சுட்டிக் காட்டியுள்ளார்

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் நல்லிணக்கத்துக்கு உதவாது என்று குறிப்பிட்டுள்ள ஸ்வையர் பிரித்தானியா நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவித்தார்

இதேவேளை இலங்கையில் தொடரும் மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா கவலை கொள்வதாகவும் அவர் கூறினார் அத்துடன் மனித உரிமை ஆர்வலர்களான வணக்கத்துக்குரிய தந்தை பிரவீன் மற்றும் ருக்கி பெர்ணான்டோ ஆகியோரும் ஜெயக்குமாரி என்ற பெண்ணும் கைதுசெய்யப் பட்டமையின் உண்மை காரணங்கள் வெளியிடப்படவில்லை என்பதையும் ஸ்வையர் சுட்டிக்காட்டியுள்ளார்

# சிகரெட் பக்கட்டுக்களில் 80 வீத எச்சரிக்கை அறிவித்தல்களுக்கான முயற்சி தொடரும்

(கொழும்பு)
பொதுமக்களின் நலன்கருதி சிகரெட் பக்கட்டுக்களில் 80 வீத எச்சரிக்கை அறிவித்தல்களை காட்சிப்படுத்த பாடுபடப் போவதாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக சில ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சிகரெட் பக்கட்டுக்களில் 80 வீதமான எச்சரிக்கை அறிவித்தல் காட்சிப்படுத்தப் பட வேண்டும் என்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சிகரெட் தயாரிப்பு நிறுவனத்தின் மனு ஒன்றின் மீதான விசாரணையின் போது இதனை 20 வீதத்தால் குறைத்துள்ளது. இது ஏற்றுக் கொள்ளதக்கதல்ல. எனவே மீண்டும் சிகரெட் பக்கட்டுக்களில் 80 வீத எச்சரிக்கையை காட்சிப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்ல

## உயர்கல்வி அமைச்சர்



(கொழும்பு)
அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் என்பது நாட்டிற்குள் பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்ல. அத்துடன் தேசத்து மகுடம் கண்காட்சி பல்கலைக் கழகத்திற்கு நன்மைகள் கிடைக்கும் ஒன்று என்பதால், அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. வயம்ப பல்கலைக் கழத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தேசத்துக்கும் மகுடம் கண் காட்சி காரணமாக இந்த பல்கலைக் கழ கத்திற்கு 15 மில்லியன் ரூபாவுக்கும் மேல் கிடைத்தது. இதனால் ருஹுணு பல் கலைக்கழகத்தில் நடத்தப்பட உள்ள கண் காட்சியை தடுக்க அமைச்சு இடமளிக் காது. அப்படி செய்ய முயற்சித்தால், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் ஓடி ஒழிய தற்போதே இடங்களை தேட ஆரம்பிக்க வேண்டும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

# புதிய பாடசாலை தெரிவுக்காக முஸ்லிம் மாணவியின் பெற்றோருக்கு அவகாசம்

(கொழும்பு)
புதிய பாடசாலைக்கு தமது பிள்ளையை அனுப்புவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க, முஸ்லிம் மாணவி ஒருவரின் பெற்றோருக்கு, உயர்நீதிமன்றம் கால அவகாசத்தை வழங்கியுள்ளது

எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி வரை இந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பாலிகா வித்தியாலத்துக்கு செல்லும் தமது மகளுக்கு இஸ்லாமிய முறைப்படி ஆடைகளை அணிய பாடசாலை நிர்வாகம் அனுமதியளிக்கவில்லை. இது தமது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். எனவே ஜனாதிபதி பாலிகா வித்தியாலயத்துக்கு பதிலாக முஸ்லிம் மகளிர் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று மனுதாரர்களான பெற்றோர் கோரியுள்ளனர்.

இந்த மனுவின் விசாரணையின் போது நேற்று வாதம் புரிந்த அரச சட்டத்தரணி, குறித்த பெற்றோர், பாடசாலை நிர்வாகத்தின் ஒழுங்குகளை மதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்

# கொழும்பில் நான்கு மாதங்களில் 52 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுப்பிடிப்பு

(கொழும்பு)
கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 52 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். இவர்களில் அதிகளவானோர் ஆண்கள் எனவும் அவர்களில் 15 மற்றும் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் அதிகளவில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நான் எந்த குற்றமும் செய்யவில்லை ஐ.பி.எஸ் அதிகாரி வருண்குமார்

(இந்தியா)
இளம் பெண்ணை காதலித்து ஏமாற்றியதாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஐ.பி.எஸ். அதிகாரி வருண்குமார், ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். சென்னை முதன்மை செசன்ஸ் நீதிமன்றத்தில் வருண்குமார் தாக்கல் செய்துள்ள மனுவில், பிரியதர்ஷினி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது ஏமாற்றுதல், நம்பிக்கை மோசடி, மிரட்டல் ஆகிய குற்றங்கள் கீழும், தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் அடிப்படையிலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் சென்னை மத்திய குற்றப்பிரிவின் வரதட்சணை கொடுமை தடுப்புப்பிரிவு பொலிசார் என் மீது வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் அந்த வழக்கு சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸ் சைபர் கிரைம் பிரிவுக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து முன்ஜாமீன் பெற்றிருந்தேன். அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பிரியதர்ஷினி மனுதாக்கல் செய்ததைத் தொடர்ந்து எனது முன்ஜாமீன் ரத்து செய்யப்பட்டது.

மேலும், ஜாமீன் பெற்றுவிட்டு தலைமறைவு ஆகமாட்டேன், வழக்கின் சாட்சிகளைக் கலைக்கமாட்டேன் எனவே எனக்கு ஜாமீன் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## உக்ரைனில் 7 ராணுவ வீரர்களை கொன்ற கிளர்ச்சியாளர்கள் - மீண்டும் பதட்டம்



(கீவ்)
உக்ரைனில் இருந்து கிரிமியா பிரிந்து ரஷ்யாவுடன் இணைந்தபிறகு, கிழக்குப் பகுதியில் உள்ள ரஷ்ய ஆதரவாளர்களும் தனி நாடு கோரி வருகின்றனர். இதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிளர்ச்சியாளர்கள் இன்று 7 உக்ரைன் அரசு படை வீரர்களைக் கொன்றனர். இதையடுத்து உக்ரைனில் மீண்டும் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் அரசாங்கமும், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களும் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்காக ஜெர்மன் வெளியுறவு மந்திரி பிராங்க்-வால்டர் வந்துள்ள நிலையில் இந்த வன்முறை நடந்துள்ளது. உக்ரைன் பதட்டத்தை தணிக்கும் நோக் கத்தில் கிழக்கு-மேற்கு பாதுகாப்பு அமைப்பான ஓஎஸ்சிஇ ஒரு புதிய திட்டத்தை தயாரித்துள்ளது. இந்த திட்டத்திற்கு ரஷ்யா முக்கியத்துவம் கொடுத்த போதிலும், கிளர்ச்சியாளர்கள் அமைதிப் பேச்சுக்கு இணங்கி வருவதால் அரசு ராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளது.

உக்ரை னின் மேற்கத்திய ஆதரவு அதிகாரிகள் உண்மையான பேச்சுவார்த்தை நடத்த மறுப்பதாகவும் ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. வன்முறையை கட்டுப்படுத்துவது, ஆயுத குறைப்பு, தேசிய பேச்சுவார்த்தை மற்றும் தேர்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்து வதாக ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இதற்கிடையே அரசு, பாராளுமன்றம் மற்றும் பிராந்திய தலைவர்கள் கலந்து கொள்ளும் வட்டமேஜை கூட்டத்திற்கு உக்ரைன் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இன்று நடைபெறும் இந்த கூட்டத்தில், எந்த பிரிவினைவாத பிரதிநிதிகளும் அழைக்கப்படவில்லை. கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் உள்ள டோனட்ஸ்க் மற்றும் லூகான்ஸ்க் மாகாணங்களில் சமீபத்தில் பொதுவாக் கெடுப்பு நடத்தி சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு போர்ட்டோ ரிகோ பாதிரியார் கைது

(வாஷிங்டன்)
அமெரிக்க பிராந்தியத்தில் குழந்தைகளை பாலியல் தொந்தரவு செய்த வழக்கில் முதல் முறையாக ரோமன் கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போர்ட்டோ ரிக்கோ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள இஸ்ரேல் பெரியாஸ் (வயது58) என்ற அந்த பாதிரியார், தேவாலயத்தின் பலிபீட சிறுவனை 8 வயது முதல் 17 வயது வரையில் தொடர்ந்து பாலியல் தொந்தர்வு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பாதிரியார் தனது இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அந்த சிறுவனுக்கு பணம், கம்ப்யூட்டர், கேமரா போன்ற பெருட்களை கொடுத்து வசியம் செய்ததாகவும், தற்போது 21 வயதாகும் அந்த சிறுவன் பல்கலைக் கழகத்தில் படித்து வருவதாகவும் நீதித்துறை செயலாளர் தெரிவித்தார். அரசுத் தரப்பு வழக்கறிஞர் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ததையடுத்து பாதிரியார் பொறுப்பில் இருந்து பெரியாஸ் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

ஆனால், அவர் வெளியேற்றவில்லை சுமார் 17 பாதிரியார்கள் மற்றும் 8 மறைமாவட்ட ஆயர்கள் மீது இதுபோன்ற பாலியல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு விசாரணை நடைபெற்றாலும், பாலியல் வழக்கில் தண்டனையை எதிர்நோக்கும் முதல் பாதிரியார் பெரியாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

## லஞ்ச வழக்கில் இஸ்ரேல் முன்னாள் பிரதமருக்கு 6 ஆண்டு சிறைத்தண்டனை



(ஜெருசலேம்) லஞ்ச வழக்கில் சிக்கிய இஸ்ரேல் முன்னாள் பிரதமர் எகுட் ஒல்மெர்ட்டுக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1993ம் ஆண்டு முதல் 2003-ம் ஆண்டு வரை ஜெருசலேம் நகரின் மேயராக எகுட் ஒல்மெர்ட் பணியாற்றினார். அப்போது, ஆடம்பர வீடுகள் அபிவிருத்தி திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் முறைகேடு செய்ததாக அவர் மீதும், 9 அரசு அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த டெல் அவிவ் நீதிமன்றம், ஒல்மெர்ட்டுக்கு 6 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கி இன்று தீர்ப்பளித்தது. பொறியாளருக்கு 7 ஆண்டு தண்டனையும், மற்றவர்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் வரை தண்டனையும் வழங்கப்பட்டது.

தான் ஒருபோதும் லஞ்சம் கேட்டதில்லை, லஞ்சம் வாங்கியதில்லை என்று மறுத்து வரும் ஒல்மெர்ட், தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்.

## பீஜிங்கில் புதிய விமான நிலையம் சீன அரசு முடிவு

(பீஜிங்)
மேற்கத்திய நாடுகளுக்கு சவால் விடும் விதமாக வணிக,வர்த்தகத் துறைகளில் வளர்ந்து வரும் சீனா அதற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டிய அவசியத்தில் உள்ளது. கடந்த 1958ல் கட்டப்பட்ட தலைநகர் பீஜிங்கில் உள்ள சர்வதேச விமான நிலையம் அதனுடைய கொள்ளளவுத் திறனுக்கு அதிகமான பயணிகளை அங்கு கையாண்டு வருகின்றது.

80 மில்லியன் மக்களை சமாளிக்கும் விதமாகக் கட்டப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தை கடந்த ஆண்டு 83 மில்லியன் மக்கள் பயன்படுத்தியுள்ளார்கள். சீனாவில் உள்ள மொத்த விமான நிலையங்களும் சேர்ந்து கடந்த வருடம் 754மில்லியன் பயணிகளைக் கையாண்டுள்ளன. இது அதற்கு முதல் வருடத்தைவிட 11 சதவிகிதம் அதிகமென்றும், கடந்த 5 வருடங்களுக்கு முன்னால் இருந்ததைவிட 86 சதவிகிதம் அதிகமென்றும் கூறப்படுகின்றது.

வரும் 2015-ம் ஆண்டில் பீஜிங் விமான நிலையத்தில் மட்டுமே 113 மில்லியன் பயணிகள் வருகை இருக்குமென்றும் 2020-ம் வருடத்தில் இது 142 மில்லியனாக அதிகரிக்கும் என்றும் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் ஏற்படும் நெரிசலையும், தாமதத்தையும் தவிர்க்க அடுத்த இருபது ஆண்டுகளுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை புது விமானம் சீன வான்வெளியில் பறக்க விடப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீஜிங், ஷாங்காய், குவாங்சு போன்ற விமான நிலையங்களில் ஏற்படும் தாமதங்களும், விமானப் பயணங்களின் பற்றாக்குறையும் மக்களிடையே அதிருப்தியையும், சில நேரங்களில் அங்கு கலவரத்தையும் தோற்றுவிப்பதாக அமைகின்றன. கடந்த பிப்ரவரியில் சின்ஷெங் சர்வதேச விமான நிலையத்தில் தங்களுக்கு ஏற்பட்ட நீண்ட தாமதத்தினால் ஆத்திரமடைந்த பயணிகள் விமான நிலையத்தில் இருந்த கம்ப்யூட்டர்களையும், நாற்காலிகளையும் உடைத்தெறிந்து ரகளையில் ஈடுபட்டனர்.

ஒரு பயணி நிலையத்தின் கட்டுப்பாட்டு அறைக்குள் சென்று அங்கிருந்த ஊழியரையே தாக்கத் துணிந்ததாக பத்திரிகை செய்தி தெரிவித்தது. இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கும்விதமாக பீஜிங்கின் தெற்கில் ஹெபெய் மாகாணத்தின் அருகில் 14 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டில் ஒரு புதிய விமான நிலையத்தை அமைக்க சீன அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு 72 மில்லியன் பயணிகள் பயணிக்கவும், 2 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்படவும் முடியும் என்று அந்நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சகம் கடந்த வாரம் தெரிவித துள்ளது.

## மனைவி கார் ஓட்டுவதை அறிந்த கணவர் பரிசாக அளித்த விவாகரத்து



(துபாய்)
தீவிர இஸ்லாமியத்தைக் கடைப்பிடிக்கும் அரபு நாடுகளில் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் மிக அதிகம். அவற்றில் ஒன்று பெண்கள் கார் ஓட்டுவதாகும். இங்கு வசித்துவரும் பெண் ஒருவர் தான் கார் ஓட்டுவதை தனது செல்போனில் படம் பிடித்து அவரது கணவருக்கு அனுப்பி அவரை ஆச்சரியப்படுத்த விரும்பினார்.

ஆனால் இந்த செயல் அவருக்கே எதிர்வினையாக முடிந்துவிடும் என்பது அவரே எதிர்பார்க்காத ஒரு திருப்பமாக அமைந்து விட்டது. தான் கார் ஓட்டுவதை வீடியோவாக எடுத்த அந்தப் பெண் அதனைத் தனது கணவரின் மொபைல் போனுக்கு அனுப்பியிருந்தார். அதனைப் பார்த்து வியக்கும் கணவர் தன்னைப் பாராட்டுவார் என்று அவர் எதிர் பார்த்தார். ஆனால் தன்னிடம் முன்கூட்டி இதுபற்றி ஏதும் தெரிவிக்காமல் தனது மனைவி செய்த செயல் அரசின் விதிமுறைகளை மீறுவதாக உள்ளதை அந்தக் கணவர் பெரிதாக எண்ணினார்.

இதன் விளைவாக தங்களது மணவாழ்வை முறித்துக்கொள்ளுவதாக தெரிவித்து தனது மனைவியிடமிருந்து விவாகரத்து கோரியுள்ளார். பெயர்கள் குறிப்பிடப்படாமல் வெளியாகியுள்ள இந்த செய்தி விண்வெளிக்கும் சென்று சாதனை பல புரியும் பெண்களின் நிலைமை இன்னமும் உலகளவில் பல இடங்களில் பிற்படுத்தப்பட்டு இருப்பதையே தெரிவிப்பதாக அமைந்துள்ளது என்றே கருதத் தோன்றுகின்றது.

## தேர்தல் வெற்றியை கொண்டாட ”லட்டு” குவிக்கும் பாஜக

(இந்தியா)
மே 16ம் திகதி தேர்தல் முடிவு வெளியான பின்பு அதை கொண்டாடும் விதமாக பல புதிய முயற்சிகளில் பாஜகவினர் இறங்கியுள்ளனர்.

நரேந்திர மோடி பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றதாக முடிவுகள் உறுதியானதும் லட்டு விநியோகித்து மகிழ்ச்சியை கொண்டாட உள்ளதாக பாஜக மும்பை பிரிவு செய்தித்தொடர்பாளர் அடுல் கூறியுள்ளார்.

மேலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க மும்பை சிபி டேங்க் சந்திப்பில் பொதுமக்களுக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும் லட்டு, மற்றும் கேக் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில், இந்த கொண்டாட்டங்களுக்காக 2000 கிலோ லட்டுகள் தயார் செய்ய கொடுக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கை முடிவுகளை பொது மக்கள் காண வசதியாக பிரம்மாண்ட எல்சிடி திரை நிறுவப்பட்டுள்ளது.

மேலும், கொண்டாட்டத்தில் அவசரம் காட்டவில்லை என்றும் நாங்கள் வெற்றி பெறுவது உறுதி [illegible] பிக்கை உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## ஈராக்கில் தொடர் தாக்குதல் பலி 34 ஆக அதிகரிப்பு




(பாக்தாத்)
ஈராக்கில் அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட அரசு தீவிரம் காட்டி வரும் நிலையில், அதற்கு பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நேற்று பல் வேறு இடங்களில் தீவிரவாதிகள் கார் [illegible] தாக்குதல் நடத்தினர்.

இதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது. ஏராளமானோர் காயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. முகமது நபிகளின் மருமகனான இமாம் அலியின் பிறந்த நாளை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்த பரபரப்பான வேளையில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந் துள்ளது. வாகனங்களில் வெடிகுண்டுகளை நிரப்பி வெடிக்கச் செய்ததால் அப்பகுதி களில் புகைமண்டலமாக காட்சியளித்தது.

ஈராக்கில் முகாமிட்டிருந்த அமெரிக்க ராணுவம் 2011ல் வாபஸ் பெற்றதையடுத்து சமீபத்தில் முதல் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. தீவிரவாதிகளின் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்கள் சுதந்திரமாக வாக்களித்தனர். தேர்தல் நடந்து இரண்டு வாரங்கள் ஆகியும் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படவில்லை. ஏப்ரல் 28-ம் தேதி வாக்குப்பதிவு மையங்கள் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலுக்குப் பிறகு இப்போது தொடர் தாக்குதல் நடந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்பத்துடன் அறிமுகமாகும் Logitech K830 கீபோர்ட்



Logitech நிறுவனம் மு830 எனும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கீபோர்ட்டினை அறிமுகம் செய்துள்ளது.

கணனியிலிருந்து 10 மீற்றர்கள் தூரத்தில் கூட வைத்து பாவிக்கக்கூடிய இக்கீபோர்ட் ஆனது சூழலில் உள்ள ஒளிக்கு ஏற்ப தன்னிலிருந்து வெளிவரும் ஒளியின் அளவை கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மேலும் 90 பவுண்ட்களே பெறுமதியான இக்கீபோர்ட் மூலம் டைப் செய்து முடிந்ததும் 5 செக்கன்களில் தானாகவே பவர் சேவ் மூட்டிற்கு மாறி மின்சக்தியை சேமிக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# குறைந்த விலையில் அறிமுகமாகும் *BlackBerry Z3* கைப்பேசியின் *Jakarta* பதிப்பு



பிரபல கைப்பேசி உற்பத்தி நிறுவனமான BlackBerry ஆனது Foxconn நிறுவனத் துடன் 5 வருட கால ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளது.

இதன்படி இரு நிறுவனங்களும் இணைந்து அறிமுகம் செய்த முதலாவது கைப்பேசியாக BlackBerry Z3 கைப்பேசியின் Jakarta பதிப்பு விளங்குகின்றது.

நாளைய தினம் அறிமுகம் செய்யப்படவுள்ள இக்கைப்பேசியின் விலையானது 200 டொலர்கள் மட்டுமே ஆகும்.

BlackBerry 10.2.1 இயங்குதளத்தில் செயற்படவுள்ள இக்கைப்பேசியானது 5 அங்குல அளவு, 650 x 960 Pixel Resolution உடைய QHD தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

மேலும் 1.2புர்ண வேகத்தில் செயலாற்றவல்ல Dual Core Processor> 5 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1.1 மெகாபிக்சலை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

# Vidameter அறிமுகம் செய்யும் அதி நவீன கைப்பட்டி

Vidameter எனும் நிறுவனம் நவீன தொழில்நுட்பத்தினைக் கொண்ட Holistic Smart band எனும் கைப்பட்டியினை அறிமுகம் செய்துள்ளது.


உடலியக்கத்தினை துல்லியமாக அறியக் கூடிய 9 சென்சார்களை உள்ளடக்கியதாக இக்கைப்பட்டி உருவாக்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் உடலின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தல், பிட்னஸ் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல், பாதுகாப்பு, லைப்ஸ்டைல் போன்றவற்றில் முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடியும். எனினும் இச்சாதனத்தின் பெறுமதி தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

# அலுவலகத்தில் டென்ஷனா?

அலுவலகத்திற்கு செல்லும் பலருக்கும் அதிகப்படியான வேலைப்பளுவினால் உண்டாகும் டென்ஷனால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. இத்தகைய மன அழுத்தத்தினால் ஒருவர் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு வாழ்க்கையின் மீது வெறுப்பு வருவதோடு, எந்த ஒரு செயலையும் செய்ய முடியாமல் தவிப்பார்கள்.



எவ்வளவு தான் அலுவலகத்தில் வேலைப்பளு அதிகம் இருந்தாலும் செய்யும் வேலையை விரும்பி செய்தால் நிச்சயம் எவ்வளவு வேலை இருந்தாலும் மன அழுத்தத்தில் இருந்து எளிதில் வெளிவர முடியும். அலுவலகத்தில் ஏற்படும் டென்சன் மற்றும் மன அழுத்தத்தில் இருந்து எளிதில் வெளிவர சிலவழிமுறைகளை பார்க்கலாம்...

டென்சன் அதிகரிப்பது போன்று இருந்தால், உடனே சிறிது நேரம் கண்களை மூடி ஆழ்ந்து சுவாசிக்க ஆரம்பியுங்கள். இதனால் மனமானது அமைதி அடைந்து, அதிகப்படியாக உணர்ச்சிவசப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு, டென்சனால் எடுக்கப்படும் தவறான முடிவுகளைத் தவிர்க்கலாம். அனைவரும் காபி குடித்தால் டென்சன் குறையும் என்று நினைத்து அவ்வப்போது காபி குடிப்பார்கள். ஆனால் உண்மையில் காபி குடித்தால் டென்சன் தான் அதிகரிக்கும். ஏனெனில் காபியில் உள்ள காப்ஃபைனானது மனதை அமைதிப்படுத்த உதவும் அடினோசைனை குறைக்கும். ஆகவே காபியை அதிகம் குடிக்காதீர்கள்.


மனமானது அமைதியிழந்து இருக்கும் போது தியானம் செய்தால் மனம் மட்டுமின்றி, உடலும் ஆரோக்கியமாக இருக்கும். ஏனெனில் தியானம் செய்யும் போது உடலில் இரத்த ஓட்டமானது அதிகரித்து மனமானது அமைதியடையும். டென்சன் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்க தண்ணீரை அடிக்கடி குடிக்க வேண்டும். இதனால் சோர்வடைந்துள்ள தசைகளை நீரானது அமைதியடையச் செய்வதோடு, மனதையும் அமைதிப்படுத்தும்.

# உலகெங்கும் அறிமுகமாகும் LG F70 LTE ஸ்மார்ட் கைப்பேசி

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் தனது புதிய 70 LTE கைப்பேசி வெளியீடு தொடர்பாக LG நிறுவனம் அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தது. இதன்படி இந்த வாரத்தில் உலகமெங்கும் இக்கைப்பேசி அறிமுகம் செய்யப்படவுள்ளது. 4.5 அங்குல அளவுடை IPS தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 1.2புர்ண வேகத்தில் செயற்படக்கூடிய Snapdragon 400 Processor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றினையும், சேமிப்பு நினைவகமாக 4GB my;yJ 8GB கொள்ளளவினையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் கூகுளின் Android 4.4 Kit Kat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களுக்கென VGA கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

# அப்பிளின் *iOS* 8 இயங்குதளத்தில் அறிமுகமாகவுள்ள புதிய வசதி



அப்பிள் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ள ஐஓஎஸ் 8 இயங்குதளப் பதிப்பில் புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது ஐபேட் சாதனங்களில் இவ் இயங்குதளத்தினை பயன்படுத்தும்போது ஒரே தடவையில் இரண்டு திரைகளைத் தோற்றுவித்து ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகளைச் செய்ய முடியும். இவ்வசதி Split Screen Multitasking என அழைக்கப்படுகின்றது.

இப்புதிய வசதியை உள்ளடக்கிய இயங்குதள பதிப்பினை கொண்டு அறிமுகமாகவுள்ள முதல் சாதனமாக 9.7 அங்குல அளவுடைய iPad Air கருதப்படுகின்றது.

# பாரிய இழப்பை நோக்கி பயணிக்கும் Tumblr




Tumblr எனப்படும் பிரபலமான சமூக வலைத்தளமானது தொடர்ச்சியாக பயனர்களை இழந்த வண்ணம் காணப்படுகின்றது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் யாகூ நிறுவனத்தினால் 1.1 பில்லியன் டொலர்களுக்கு வாங்கப்பட்ட இத்தளமானது கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து இதுவரை 7 மில்லியன் பயனர்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த டிசம்பர் மாத காலப் பகுதியில் 49 மில்லியன் வரையான பயனர்களைக் கொண்டிருந்த அத்தளம் இவ் வருட மார்ச் மாதத்தில் 42 மில்லியன் பயனர்களையே கொண்டிருந்ததாகவும், இது மொத்த சதவீதத்தில் 15 சதவீத இழப்பாகக் காணப்படுகின்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# புதிய ஜிமெயில் பயனர் இடைமுகத்தினை உருவாக்கும் முயற்சியில் கூகுள்

பல்வேறுபட்ட இணைய சேவைகளை வழங்கிவரும் கூகுள் நிறுவனத்தின் ஜிமெயில் மின்னஞ்சல் சேவையானது மிகவும் பிரபல்யமானது என்பது யாவரும் அறிந்ததே.

இச்சேவையினை மென்மேலும் பயனர்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் பொருட்டு காலத்திற்கு காலம் பல்வேறு புதிய நுட்பங்களை புகுத்துவது வழமையாக உள்ளது. இதன் தொடர்ச்சியாக தற்பாது ஜிமெயில் பயனர் இடைமுகத்தில் மாற்றங்களை ஏற் படுத்த கூகுள் நிறுவனம் முன்வந்துள்ளது.

முடியும் கட்டத்தில் உள்ள இவ் வடிவமைப்பு வேலைகளை அந்நிறுவனம் பரிசோதனை செய்து பார்த்துள்ளது.

# இணையதளத்தை அதிகம் பயன்படுத்தும் பெண்களுக்கு அறிவுரைகள்



* எந்த நிலையிலும் முகம் தெரியாத நபர்களிடம் உங்கள் தொலைபேசி எண், வீட்டு முகவரி, பள்ளி முகவரி போன்றவற்றை பகிர வேண்டாம்.

* ஃபேஸ்புக் போன்ற சமூக தளங்களில் அறிமுகம் அல்லாதவர்களை நண்பர்களாக சேர்க்க வேண்டாம்.

* குழந்தைகள் தனி அறையில் இணையத்தில் உலவுவதை அனுமதிக்காதீர்கள். குழந்தைகள் பயன்படுத்தும் கணினிகளை பொதுவான இடத்தில் வைப்பது நலம்.

* இணையம் பற்றியும் பாதுகாப்பு வழிகள் பற்றியும் உங்கள் குழந்தைகளிடம் மனம் விட்டு பேசுங்கள். கணினி பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? என்பதை கேட்டு தெரிந்துக் கொள்ளுங்கள். அவர்களுடன் இணையத்தில் சிறிது நேரம் செலவிடுங்கள். அதிகமான குழந்தைகள் வழிமாறி செல்வதற்கு சரியான அரவணைப்பு இல்லாதே காரணம் என நான் கருதுகிறேன்.

* உங்கள் குழந்தைகள் பார்வையிடும் வலைத்தளங்களை கண்காணியுங்கள். நீங்கள் செல்லும் போது குழந்தைகள் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த வலைத்தளத்தை மூடினால், உடனே கவனிக்கவும்.

* அறிமுகம் இல்லாத நபர்கள் உங்களை நேரில் சந்திக்க அழைத்தால் மறுத்து விடுங்கள்.

* நீங்கள் மற்றவர்களுடன் அரட்டை அடிப்பதை அவர்கள் பதிவு செய்யக் கூடும் என்பதை மறவாதீர்கள்.

* அறிமுகம் இல்லாதவர்களுடன் முகம் பார்த்து அரட்டை அடிக்கும் வீடியோ சாட்டிங்கை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதுவும் பதிவு செய்யப்பட்டு, உங்களுக்கு தெரியாமலே இணையத்தில் பரப்பப்படலாம்.

* இணையத்தில் உங்களை பற்றிய முழு [illegible] பகிர வேண்டாம். முக்கி[illegible] ஃபேஸ்புக்கில்.

* குழந்தைகள், பெண்கள் புகைப்படங்களை இணையத்தில் பகிர்வதை தவிர்க்கவும். தற்போது உள்ள தொழில்நுட்பங்கள் மூலம் அந்த புகைப்படங்களை ஆபாசமாக மாற்றலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

* உங்கள் password-I பெற்றோர்களை தவிர வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்.

* பணபரிமாற்றங்கள் செய்யும் பொழுது அந்த பக்கத்தின் முகவரியை பாருங்கள். http:// என இருந்தால் உங்கள் கார்ட் விவரங்களை கொடுக்காதீர்கள். https:// என்று இருந்தால் மட்டுமேபணப்பரிமாற்றம் செய்யுங்கள். https:// என்பது பாதுகாப்பான வழியாகும்.

* காதலன் என்றாலும் உங்களை படம்பிடிப்பதை அனுமதிக்காதீர்கள். பிரச்சனை பெரிதாக ஆனால் ஃசைபர் க்ரைமில் புகார் செய்யலாம். புகார் செய்யும் முன் வக்கீல்களிடம் ஆலோசனை பெறவும்.

சைபர் க்ரைமில் ஏற்றுக்கொள்ளப்படும் புகார்கள்: இண்டர்நெட் அச்சுறுத்தும் மின்னஞ்சல்கள், இணைய பின்தொடர்தல் (Cyber Stalking) ஐபாலியல் ரீதியிலான தொல்லைகள், வேறொருவர் உங்களை போல இணையத்தில் உலவுவது, மிரட்டல்கள் ஆகியவைகளும் அடங்கும். குழந்தைகள் வன்கொடுமை ஃ ஆபாச தளங்கள், கடன் அட்டை எண் திருட்டு, வலைத்தள ஹேக்கிங்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமடைந்துள்ள அரசாங்கம் துரத்துகிறது தோல்வி பயம்



(கொழும்பு)
ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை தோல்விப் பயம் அதிகரித்துள்ளதன் காரணமாக தீவிர கலக்கத்தில் இருப்பதாகவும், அமைச்சர்களுடன் ஜனாதிபதி கண்டபடி சீறிவிழுவதாகவும் அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன எதிர்வரும் தேர்தல்களில் ஆளுங்கட்சி வெற்றிபெறுவதற்கான சாத்தியம் குறைவு என்பது தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் தமது அரசியல் எதிர்காலம் குறித்து அமைச்சர்கள் கலக்கமடைந்துள்ளனர். தோல்விப் பயம் அதிகரித்துள்ளதன் காரணமாக ஜனாதிபதியுடனான சந்திப்புகளின்போது ஆளாளுக்கு உளறிக் கொட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அலரி மாளிகையிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன. ஜனாதிபதியும் அதே மனோநிலையில் இருப்பதன் காரணமாக அவரும் பதிலுக்கு அமைச்சர்களிடம் சீறிவிழுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கை, கூட்டணிக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடு காரணமாக ஆளங்கட்சிக்குள்ளேயே தற்போது பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அரசில் அங்கம் வகிக்கும் இனவாதிகள் சிறுபான்மை மக்களுக்கெதிரான திட்டமிட்ட நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு ஜனாதிபதியை வற்புறுத்தி வருகின்றனர்.

அவ்வாறான ஒரு சில நடவடிக்கைகள் காரணமாக ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளும் அரசை விட்டு வெளியேறும் மனோநிலையைக் கொண்டுள்ளன. இதற்கிடையே தற்போதைய நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை சிறுபான்மை மக்களுக்கெதிரான நடவடிக்கைகளை திரைமறைவில் மேற்கொள்வதே ஜனாதிபதியின் அபிப்பிராயமாக உள்ளது. அதன் மூலம் அடுத்த தேர்தல்களிலும் சிறுபான்மையின வாக்குகளை கவர்ந்து கொள்வது அவரது நாட்டமாக உள்ளது.

எனினும் பேரினவாத அமைச்சர்களின் ஒரு சில நடவடிக்கைகள் காரணமாக சிறுபான்மை மக்கள் அரசின் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர். இதன் தாக்கத்தை உணர்ந்துள்ள ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளும் அரசை விட்டு வெளியேறும் மனோநிலையைக் கொண்டுள்ளன. இவ்வாறான நிலையில் அரசாங்கத்தை சுமுகமாக நடத்திச் செல்வதில் கடும் நெருக்கடிகளை ஆளுங்கட்சி எதிர்கொண்டுள்ளது. மேலும் சிறுபான்மை மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான மறைமுக நடவடிக்கைகளைளும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதி இவ்வாறு இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் அவருக்கு நெருக்கமான ஜோதிடர்களும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியுள்ளனர். இந்த வருட இறுதிக்குள் பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசாங்கத்திற்கு அனுகூலமாக இருக்கும் என்றும் அதன் பின் நடத்தினால் பின்னடைவு ஏற்படுவதை தடுக்க முடியாது என்றும் அவர்கள் ஒரு திரியைக் கொளுத்திப் போட்டுள்ளனர். எப்போதும் பௌத்த தேரர்கள் மற்றும் சோதிடர்களின் ஆலோசனைகளை அப்படியே பின்பற்றும் ஜனாதிபதியும் இது தொடர்பில் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியுள்ளார்.

எனினும் தற்போதைய நிலையில் நாட்டு மக்களின் மனோநிலை அரசாங்கத்திற்கு சாதகமாக இல்லை என்பதை அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும் சில அமைச்சர்களும் பொதுமக்களின் தற்போதைய மனோநிலையில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்தால் தங்களின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் உள்ளனர். இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை முன்கூட்டியே நடத்துவதே பொருத்தமாக இருக்கும் என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

இதன் காரணமாக பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் எதை முதலில் நடத்துவது என்பதில் முடிவெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. எனினும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாய்ப்புகளே அதிகமாக இருப்பதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதித் தேர்தல் என்று முடிவெடுத்து விட்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தனக்கெதிராக பலமான பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்திவிடுவார்கள் என்றும் ஜனாதிபதி அச்சம் கொண்டுள்ளார்.

## இலங்கைத் தமிழரை அகதிகளாக ஏற்கமுடியாது

### இந்திய மத்திய அரசு

(இந்தியா)
இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வருவோரை அகதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று இந்திய மத்திய அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இது தொடரபான செய்தியொன்றைப் பிரசுரித்துள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையில் அமைதி திரும்பியுள்ளதால், 2011ம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கைத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதை இந்திய அரசாங்கம் நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக மண்டபத்தில் உள்ள சிறப்பு பிரதி மாவட்ட ஆட்சியர் அலுவலம் தகவல் தருகையில், 2011ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இருந்து வந்த எவரையும் அகதிகளாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று இந்திய மத்திய அரசு தமக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளன.

சமீபத்தில் படகு மூலம் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த 10 இலங்கைத் தமிழ் அகதிகள், வெளிநாட்டவர்கள் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையிலேயே, இந்திய மத்திய அரசின் இந்த உத்தரவு வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

## மாணவர்களின் குற்றச் செயல்களை தடுக்கும் பொறுப்பு புலனாய்வுப் பிரிவிடம்

(கொழும்பு)
பாடசாலைகளுக்கு அருகாமையில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் பொறுப்பு புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு அருகாமையிலும் அதன் உள்ளேயும் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்க விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு அருகாமையில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள், போதை மாத்திரைகள், மதுபானம் போன்றன விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாணவர்களிடம் சில தரப்பினர் கப்பம் கோரி வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச் செயல்களை தடுக்கவும் குற்றவாளிகளை கண்டு பிடிக்கவும் புலனாய்வுப் பிரிவினை ஈடுபடுத்த உள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கடத்தல் கும்பல்களுக்கு சாதகமாக தனுஷ்கோடி வரை கைத்தொலைபேசி சிக்னல்

(கொழும்பு)
இலங்கையில் உள்ள தொலைபேசிக் கோபுரங்களின் சிக்னல் தனுஷ்கோடி வரை எட்டுவதால் கடத்தல் கும்பல்களுக்கு கடற்படையினரிடமிருந்து தப்புவதற்கு வசதியாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய ஊடகமொன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு ராமேஸ்வரத்திலும், தலைமன்னாரிலும் 100 மீட்டர் உயரத்தில் டிரான்ஸ்மிஷன் கோபுரம் அமைக்கப்பட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொலைபேசி சேவை அளிக்கப்பட்டது. 1983-ல் இலங்கையில் உள்நாட்டு போர் தீவிரமடைந்தபோது இந்த கோபுரங்கள் மூலம் தொலைபேசி சேவையை வழங்குவது தடைபட்டது. பின்னர் 1988-ல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு சென்றபோது மீண்டும் அந்த கோபுரங்கள் செயல்படத் தொடங்கின.

இந்த நிலையில், 2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் தொலைதொடர்பு துறை தனியார் மயமாக்கப்பட்ட பின்னர், பிரபல இந்திய தனியார் தொலைபேசி நிறுவனங்கள் பல இலங்கையில் தங்களின் சேவைகளை வழங்கி வருகின்றன.
தற்போது இலங்கையிலுள்ள தலைமன்னார் துறைமுகத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களின் செல்போன் சேவை 30 கி.மீ. தூரம் வரை துல்லியமாக கிடைக்கிறது. இதனால் கடத்தல்காரர்களுக்கு இவை பெரும் உதவியாக உள்ளதாம்.

கச்சத்தீவு, இந்திய - இலங்கை மணற்திடைகள் மற்றும் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையிலும் இலங்கை செல்போன் நிறுவனங்களின் சேவை எட்டுவதால் கடத்தல் கும்பல்கள் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினரின் நடமாட்டத்தை அறிந்து கொண்டு படையினரிடம் இருந்து டிமிக்கி கொடுத்து விட்டு எளிதாக தப்பி விடுவதாக கூறப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக ராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடத்தி வரப்பட்ட 100 கிலோவிற்கும் அதிகமான தங்கக் கடத்தலை காவல்துறையினர் பறிமுதல் செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானம்

(கொழும்பு)
சில முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்து நாட்டின் சகல பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டமொன்றில் ஈடுபட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 3ம் திகதி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி போராட்டமொன்றை முன்னெடுக்கப் போவதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் நேற்று உயர் கல்வி அமைச்சிற்கு அறிவித்துள்ளனர். தமது கோரிக்கைகளுக்கு உரிய பதிலளிக்காவிட்டால் கடுமையான தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் மோசமான முறையில் ஒடுக்கப்படுகின்றனர் என விரிவுரையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

2012ம் ஆண்டில் அரசாங்கம் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்துள்ளனர். தமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதனைத் தவிர வேறு வழியில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொதுநலவாய போட்டிகளில் மஹிந்த கலந்துக் கொள்வதை தடுக்க வேண்டும்

### நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானியாவுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கு பற்றுவதன் மூலம் ஸ்கொட்லாந்து கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு போட்டி களங்கமடைய விருப்பதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பிரித் தானிய அரசாங்கம் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு, பொதுநலவாய போட்டிகளின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில் லியம் ஹேக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ மீது பல்வேறு மனித உரிமை குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தினால் வகுக்கப்பட்ட நிபந்தனைகளை பின்பற்றவில்லை. இறுதியுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் அவர் எந்த நட்டஈட்டையும் வழங் கவில்லை.

தொடர்ந்தும் தமிழ் மக்கள் அச்சத்துடனே வாழ வேண்டிய நிலை இன்னும் இலங்கையில் நீடிக்கிறது. இவ்வாறான நிலையில் மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாய போட்டிகளில் கலந்துக் கொண்டால், அது இந்த போட்டிகளை களங்கப்படுத்தும்.
எனவே பிரித்தானியா இந்த விடயத்தில் தலையிட்டு மகிந்தவின் வருகையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு, பொதுநலவாய நாடுகள் செயலகத்தையும், விளையாட்டு ஏற்பாட்டுக் குழுவையும் பணிக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தை விரும்பாதவர்கள் மனம் திரும்புவார்கள் - கெஹலிய நம்பிக்கை

(கொழும்பு)
அரசாங்கத்தின் கொள்கைகள் மீது விருப்பம் இல்லாதவர்களும், நாட்டை பிரிக்க நினைக்கின்றவர்களும், மனம் திரும்புவார்கள் என்று நம்புவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளை பாதுகாப்பதற்காக சில நாடுகள் சில குழுக்களை தூது அனுப்பின.

சில நாடு கள் கப்பல்களை கூட அனுப்ப தயாராக இருந்தன. ஆனால் ஜனாதிபதி இந்த அழுத்தங்களை புறந்தள்ளி யுத்தத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார்.



தற்போது யுத்தம் நிறைவடைந்த பின்னர் தத்தமது விருப்பங்களுக்கு எதிராக ஜனாதிபதி செயற்பட்டமையால், அந்த நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிராக செயற்படுகின்ற என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவேந்தலை** களுக்கு அரசு எவ்வளவு முக்கியத்துவம் வழங்குகின்றது என்பது தெரிகிறது.

அதேநேரத்தில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு வடக்கில் அரசு தடை விதித்துள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் பிரிவினைக் குழுக்கள் விடுத லைப் புலிகளைப் போற்றிப் புகழ்வதற்கும் அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

போர் முடிவுக்கு வந்ததன் நினைவு நிகழ்வுகளை வடக்கிலும் தெற்கிலும் நடத்துவது தொடர்பில் அரசு காட்டும் இத்தகைய முரண்பட்ட போக்கு இந்த நாடு அரசியல் ரீதியாக எதிர்கொண்டுள்ள அவலத்தையே எடுத்துக்காட்டுகிறது.

மக்கள் அனைவரையும் அரசியல் ரீதியாக ஒன்றிணைப்பதற்குப் பதிலாக இலங்கையின் சமூகங்களுக்கு இடையில் தொடர்ந்து நிலவும் பிரிவு குறித்து தேசிய சமாதானப் பேரவை கவலை கொள்கிறது. , வடக்கில் உள்ள மக்கள் தமது பிரச்சினைகளையும் சோகங்களையும் தீர்த்துக்கொள்வதற்கான கட்டமைப்பைத் தாங்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை எமது நாடு வழங்கியிருப்பது கவலையளிக்கிறது. இது பிரிவினைச் சிந்தனை தொடர்வதற்குப் பங்களிப்புச் செய்யும்.

ஒரே விடயத்தில் வெற்றிபெற்ற தரப்பும் தோல்வியடைந்த தரப்பும் ஒன்றாக இல்லையென்றால் அமைதி ஏற்படாது. தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள், படுகொலைகள் மூலம் இலங்கை முழுவதும் கடந்த 30 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இத்தகைய இரத்தக்களரியான ஒரு போர் மீண்டும் ஏற்படக்கூடாது என்று விரும்பிய அனைவருமே நினைவுகூரப்பட வேண்டும்.

இது தொடர்பான பரிந்துரை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

எந்தவொரு நாடும் தனது உள்நாட்டுப் போரில் ஈட்டிய வெற்றியைக் கொண்டாடியதில்லை. அமெரிக்காவின் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் 6 லட்சம் மக்கள் உயிரிழந்தார்கள். வடக்கு வெற்றி பெற்ற பின்னர் வெற்றிக் கொண்டாட்டங்கள் எவையும் நடத்தப்பட்டதில்லை. அந்த வெற்றி அனைவருக்குமானது என்பதைக் காட்ட அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் அனைத்தையும் கடந்து சிந்தித்தார் செயற்பட்டார்.

துரதிரஸ்டவசமாக இலங்கையின் அரசியல்வாதிகள் அப்படி நடந்து கொள்ளவில்லை. போர் வெற்றியைக் கொண்டாடுகின்றனர்.

போரில் உயிரிழந்த அனைவருக்காகவும் மே 18 ஆம் திகதி மதப் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு இலங்கை முழுவதும் உள்ள மக்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம். எல்லாச் சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை இலங்கையின் எல்லா மக்களும் அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றுள்ளது.

---

**தமிழீழப்** இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.

அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும். அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ் சாத அர்ப்பணிப்புக்களோடு நாம் முன்னெடுக்கவேண்டும் என அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1976 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்றியது. 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்ற அரசியல் சட்டத்தை ஜே.ஆர். கொண்டு வந்தார்.

இந்த ஆணையை சர்வதேச சமூகத்தின் முன் மீளவும் எடுத்துரைக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் புலம்பெயர் தமிழ்ச்சமூகம் ஒன் றிணைந்து 2009/2010 புலம்பெயர் தேசத் திலும் வட்டுக்கோட்டை தீர்மானத்துக் கான மீள்வாக்களிப்பு நடாத்தி வரலாற்று பதிவாக தனித் தமிழீழமே தமிழர்களுக்கான தீர்வு என எண்திசைக்கும் முழக்கமிட்டனர். தமிழர்களின் வாழ்வுரிமையினை அறப்போரில் வென்றெடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கை யோடும் உறுதியோடும் தளராது போராடிய உன்னதமான அரசியல் தலைவர் தந்தை செல்வா. அறவழியில், அமைதிவழியில் போராடிக் களைத்து, கண்டபலன் ஒன்று மில்லை. மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட, கொடுக்கப்பட்ட வாக்குறு திகள் செல்லாக்காசாக கிடப்பில் போடப்பட, இனி ஆண்டவன்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அவரது ஆற் றாமையின் வெளிப்பாடே புதிய இளம் தலைமுறை போராட்ட வழிமுறையை மாற்றக் காரணமாக அமைந்தது.

30 ஆண்டுகால, ஆயுதவழிமுறையிலான தமிழீழத்திற்கான சுதந்திரப்போராட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் உன்னதமான தியாகங்களாலும் ஈடு இணையற்ற ஈகங்களினாலும் செந்நீர் ஊற்றி வளர்த்தெடுக்கப்பட்டது. 2009 ஆண்டு முள்ளிவாய்க்காலில், இலட்சக்கணக்கான எமது உறவுகளை இனவழிப்பு செய்வதன் ஊடாகவே தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட் டத்துக்கு பின்னடைவினை சிங்கள பேரினவாத அரசினால் ஏற்படுத்த முடிந்தது. அதுவும் சிங்கள அரசு தனித்து நின்று தமிழர்களை வீழ்த்துவதென்பது எப்போதுமே சாதித்திருக்க முடியாத காரியம்! வல்லாதிக்க சக்திகளின் துணையும், சதிகளும், சூழ்ச்சிகளும், காட்டிக் கொடுப்புகளுமே சிங்கள அரசுக்கு பலமாக மாறின. சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான சர்வதேச அழுத் தங்கள் அதிகரித்துள்ள நிலையிலும் ஈழத் தமிழர்களின் இன அழிப்பை சிங்கள பேரினவாத அரசு முழுவீச்சோடு முன்னெடுக் கின்றது.

ஐநாவில் வருடம் தோறும் நிறை வேற்றப்படும் தீர்மானங்களும் பயன் இழந்து கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

அந்தவகையில் தனித் தமிழ் ஈழமே தீர்வு என வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தளத்தில் உருவாகப்பட்ட நாடுகள் வாரியான மக்கள் அவைகள் தனித் தமிழீழமே தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பதை அனுபவத்தின் ஊடாக கற்றதோடு, தொடர்ந்தும் தமிழீழத்தை மீட்டெடுக்க அயராது அர்ப்பணிப்போடு உழைப்போம் என ஈழப் போராட்டத்தில் முக்கிய வரலாற்று விடயமாக நடந்த "தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும்" என்ற வட்டுக்கோட்டை பிரகடனம் செய்யப்பட்ட இந் நாளில் உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

---

**எம் உறவுகளுக்காக** இன்று அச்சுறுத்தல் களுக்கும் அடக்குமுறை களுக்கும் உள்ளாக் கப்பட்டுள்ளது.

எமது உணர்வுகள் ஒன்றுகூடக்கூடிய ஒரு கட்டமைப்பு திட்டமிட்டு பலவீனப் படுத்தப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாளில் வரவிருக்கும் இரங்கல் நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.நம் சமூகத்தில் உள்ள எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இந்த மே மாதத்தில் பாதிக்கப்பட்டுள்ளோம். தனிப்பட்ட ரீதியில் எனது குடும்பம் கூட பாதிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில், தேசிய வீரர்கள் தினம் கொண்டாடப்பட்டது. ஆனால் உயிர் நீத்த எம் உறவுகளுக்காக கண்ணீர் விடவோ நினைவுகூரவோ முடியாமல் உள்ளோம். என்றாலும் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் எமது உணர்வுகளை வெளிக்காட்டவே செய்வோம் என்றார் அவர்.

இனிமேல் நாம் தலைநிமிர்ந்து நிற்கும் காலம் ஆரம்பமாகிவிட்டது என நான் நினைகிறேன். கலை கலாசாரம் மூலமாக எம் பண்பாடுகள் விழுமியங்கள் மீண்டும் மிளிர ஆரம்பித்துள்ளதை நான் பாக்ர்கிறேன்.

எம் மண் வன்முறை உணர்வாகப் பார்க்கப்படுகின்றது. இதனை நீக்கவும் எம்மைக் காத்துக்கொள்ளவும் இளைஞர்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

---

**இன வாதரீதியாகச்** மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் சீற்றத்துடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணசபை இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களை 50 மில்லியன் ருபா செலவில் அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் எ மஜீத் தெரிவித்திருந்தார்.

கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 76 மில்லியன் ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளதாகவும் கடந்தாண்டு 20 மில்லியன் ரூபாவும் இவ்வாண்டு 50 மில்லியன் ரூபாவும் ஒதுக கப்பட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களும் தலா 50 லட்ச ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதில் அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை, றகுமானியா, பாத் சம்மாந்துறை,மஜீட்புரம் மற்றும் நாகேஸ்பவ எனும் 04 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 03 முஸ்லிம் கிராமங்களும் ஒரு சிங்கள கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இத்த தெரிவில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூட தெரிவுசெய்யப்படவில்லை. கடந் தாண்டும் இத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூட தெரிவு செய்யபடவில்லை.

அம்பாறையில் தமிழர்கள் இல்லையா? ஏனிந்த அநீதி? பாராபட்சம்? மஹிந்த அரசு கூட கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் இன மத பேதம் பாராட்டாமல் 10 லட்ச ருபா ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்தாண்டு இப்பாரபட்சம் இடம்பெற்ற போது நான் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண அபிவிருத்தி சபைக் கூட்டத்திலும், கிழக்கு மாகாணசபை அமர்விலும் எனது கடும் ஆட்சேபனையை எதிர்ப்பை பகிரங் கமாகவே எழுத்துமூலம் தெரியப்ப டுத்தினேன். ஆனால் பலன் ஏதும் கிட்டவில்லை.

ஆனால் இவ்வாண்டும் அதே பச்சைப் பாரபட்சம் அநீதி அரங்கேறியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் சதாம்ஹுசைன் மாதிரிக் கிராமம், வாழைச்சேனை காவத்தைமுனை, முனைக்காடு மற்றும் கருங் காலிச்சோலை ஆகிய கிராமங்கள் அபிவிருத்திக்காக தெரிவு செய்ய ப்பட்டுள்ளன. இதில் 2 தமிழ்க் கிராமங்களும் 2 முஸ்லிம் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதாவது இங்கு தெரிவில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை. இனவிகிதாசாரப்படி பார்த்தால் 3 தமிழ்க் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் கிழக்கு மாகாணசபை பச்சையாகவே பாராபட்சத்தை இனவாதத்தை கக்கி வருகிறது. மேடையில் மட்டும் இன ஐக்கியத்தை பேசுவார்கள். செயற்பாடுகளிலும் நிதி ஒதுக்கீடுகளிலும் முஸ்லிம்களை மையமாக வைத்தே இனரீதியாக செயற்பட்டு வருகிறார்கள்.

உண்மையில் யுத்தத்தாலும் சுனாமியாலும் கிழக்கு மாகாணத்தில் அதிகூடுதலாகப் பாதிக்கப்பட்டவை தமிழர் பிரதேசங்களாகும். எனவே அவர்களுக்கே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணசபை என்பது மூவினங்களுக்கும் சொந்தமானது. ஆளுங்கட்சி எதிர்க்கட்சி இரண்டையும் உள்ளடக்கியதே. இதனை முதலமை ச்சரும ஏனையோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறே எதிர்வரும் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் நிதியொதுக்கீடும் குறித்தவொரு இனத்திற்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டு விடுமோ என்ற நியாயமான அச்சமும் எழுந்துள்ளது.

இனியும் இதனை அனுமதிக்க முடியாது. சர்வாதிகார ஆட்சி செய்வதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

எனவே இதற்கு முடிவுகட்டுமுகமாக எதிர்வரும் சபை அமர்வில் கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல உறுப்பினர்களையும் ஒன்று திரட்டி பாரிய போராட்டத்தையும் எதிர்ப்பையும் நடாத்த விருப்பதாக குறிப்பிட்டுள்ளார்

---

**இலங்கையில்**

குறித்து ஆராய்வதற்காக க்ரிபீன் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்று வெளிநாடுகளில் பணியாற்றும் 24 வீதத்தினர் தேசிய பொருளாதாரத்தில் 33 வீத வருமானத்தை ஈட்டி தருகின்றனர்.

இந்தநிலையில் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் உரிமைகளை கண்காணிப்பதற்காக விசேட பிரதிநிதி ஒருவர் இலங்கை வருவது இதுவே முதல் முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**நாடு கடந்த** பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் நாடு கடந்த தமிழீழ கண்காட்சியொன்றையும் நடத்தி வருகின்றது.

தமிழ் மக்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டமை குறித்து இந்த கண்காட்சியில் தெளிவுபடுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டுமென நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் வீ.ருத்ரகுமாரன் தெரிவித்துள்ளார்.

---

**பொதுநலவாய**

அமைச்சர் வில்லியம் ஹேக்கிற்கு கடிதங்கள் அனுப்பி வைக்க ப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கு எதிராக போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் ஜனாதிபதியின் விஜயம் குறித்து அச்சம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது,

பிரித்தானிய நிழல் டக்ளஸ் அலக்சான்டர் மற்றும் நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் ருத்ரகுமாரன் ஆகியோர் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

விநியோக முகவர்களும் விற்பனையாளரும் தேவை
புதியவன் பத்திரிக்கை விநியோகிக்க விரும்புபவர்கள் விற்பனை செய்ய ஆர்வமுடையவர்கள் எம்மோடு இணையுங்கள்.
விநியோகப்பிரிவு,
புதியவன், பிரதான வீதி,
மன்னார்-0232223545,
0778355464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜடேஜா அடித்த சிக்சர் வெற்றிக்கு முக்கியமானது- டோனி



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று ராஞ்சியில் நடந்த ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்-ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்கு 148 ரன் எடுத்தது. வாட்சன் 31 ரன், அங்கீத் சர்மா 30 ரன், பின்னி 22 ரன் எடுத்தனர்.

149 ரன் இலக்குடன் விளையாடிய சென்னை அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. மேக்குல்லம் (6 ரன்), ரெய்னா (2), சுமித் (44), அஸ்வின் (14), டுபெலிசிஸ் (38) அடுத்தத்தடுத்து வெளியேறினர்.

கடைசி 2 ஓவரில் வெற்றிக்கு 25 ரன் தேவைப்பட்டது. கூப்பர் வீசிய 19-வது ஓவரில் ஜடேஜா சிக்சர் அடித்தார். அந்த ஓவரில் 13 ரன் எடுக்கப்பட்டது. கடைசி ஓவரில் 12 ரன் தேவைப்பட்டது. பவுல்க்னெர் வீசிய அந்த ஓவரில் கேப்டன் டோனி 2வது பந்தை சிக்சர் அடித்தார். 3-வது பந்தில் 2 ரன்னும், 4-வது பந்தில் 3 ரன்னும் எடுத்து வெற்றி பெறவைத்தார். வெற்றி குறித்து டோனி கூறியதாவது:-

இந்த ஆடுகளத்தில் அடித்து விளையாட கடினமாக இருந்தது. ஜடேஜா அடித்த சிக்சர்தான் வெற்றிக்கு முக்கிய மான தாகும். அஸ்வினிடம் பேட்டிங் திறமை இருக்கிறது. அதை பயன்படுத்தி கொள்ள முன் கூட்டியே களம் இறக்கினோம். அதற்கு நல்ல பலனை தந்தார். இது அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்றார்.

சென்னை அணி இதுவரை 10 ஆட்டத்தில் விளையாடி 8 வெற்றி 2 தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்று உள்ளது. புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ள சென்னை அணி அடுத்த சுற்றை (பிளே-ஆப்) உறுதி செய்துவிட்டது.

சென்னை தனது அடுத்த ஆட்டத்தில் வருகிற 18-ந்தேதி பெங்களூர் ராயல் சேலஞ்சர்சை சந்திக்கிறது.

# டெல்லி அணியை வீழ்த்தியது பெங்களூர்



ஐ.பி.எல். கிரிக்கெட்: டெல்லி அணியை வீழ்த்தியது பெங்களூர்

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றிரவு பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 38-வது லீக் ஆட்டத்தில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்சும், டெல்லி டேர்டெவில்சும் மோதின. மழை காரணமாக ஆட்டம் 1 மணி 10 நிமிடங்கள் தாமதமாக தொடங்கியது.

டாஸ் ஜெயித்த டெல்லி கேப்டன் பீட்டர்சன் முதலில் பெங்களூர் அணியை பேட் செய்ய பணித்தார். இதன்படி முதலில் பேட் செய்த பெங்களூர் அணியில் கிறிஸ் கெய்ல் 22 ரன்னிலும் (23 பந்து, ஒரு பவுண்டரி, 2 சிக்சர்), கேப்டன் விராட் கோலி 10 ரன்னிலும், பார்த்தீவ் பட்டேல் 29 ரன்னிலும் (28 பந்து) குறிப்பிட்ட இடைவெளியில் வெளியேற்றப்பட்டனர்.

இதன் பின்னர் டிவில்லியர்சுடன், யுவராஜ்சிங் கைகோர்த்தார். டிவில்லியர்ஸ் தனது பங்குக்கு 17 பந்துகளில் 4 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 33 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை போன்று, இந்த மோதலிலும் யுவராஜ்சிங் விசுவரூபம் எடுத்தார். இம்ரான் தார் ஓவரில் ஹாட்ரிக் சிக்சர் விரட்டிய யுவராஜ்சிங், தொடர்ந்து எதிரணி பவுலர்களை கதிகலங்க வைத்தார்.

மழை தூரல் ஓய்ந்த பிறகு, யுவராஜ்சிங் பேட் சிக்சர் மழையை கொட்டியது. இதனால் இறுதி கட்டத்தில் மைதானத்தில் எங்கும் யுவி ஆரவாரமே ஒலித்தது. எந்த பந்து வீச்சாளரையும் விட்டுவைக்காத யுவராஜ்சிங், ராகுல் சுக்லாவின் ஆட்டத்தின் கடைசி ஓவரில் 4 மெகா சிக்சர்களை அடித்து பரவசப்படுத்தினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பெங்களூர் அணி 4 விக்கெட் இழப்புக்கு 186 ரன்கள் குவித்தது. யுவராஜ்சிங் 9 சிக்சர், ஒரு பவுண்டரியுடன் 68 ரன்கள் (29 பந்து) விளாசி களத்தில் நின்றார். இந்த தொடரில் அவரது 3-வது அரைசதம் இதுவாகும். சச்சின் ராணா 15 ரன்கள் எடுத்தார். கடைசி 5 ஓவர்களில் மட்டும் பெங்களூர் அணி 78 ரன்களை திரட்டியது.

பின்னர் 187 ரன்கள் இலக்கை நோக்கி விளையாடிய டெல்லி அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 170 ரன்கள் மட்டுமே எடுத்தது.

தொடக்க வீரர்களாக விளையாடிய விஜய் மற்றும் டி காக் ஒற்றை இலக்க ரன்னில் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்களும் சிறப்பாக விளையாட தவறியதால் டெல்லி அணி தோல்வியை தழுவியது. அதிகபட்சமாக டுமினி 48 ரன்கள் எடுத்து அவுட் ஆனார்.

டெல்லி அணியை வீழ்த்தியதன் மூலம் பெங்களூர் அணி 8 புள்ளிகளுடன் 6-வது இடத்தில் உள்ளது.

# ஐ.பி.எல் கொல்கத்தாவுக்கு 5-வது வெற்றி

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றிரவு கட்டாக் மைதானத்தில் மும்பை இந்தியன்சும் - கொல்கத்தா நைட் ரைடர்சும் சந்தித்தன. டாஸ் ஜெயித்த கொல்கத்தா முதலில் பவுலிங் செய்ய தீர்மானித்தது.

இதன்படி முதலில் பேட்டிங்கை தொடங்கிய மும்பை அணி சுழற்பந்து வீச்சை சமாளித்து அதிரடி காட்ட முடியாமல் திணறியது. சுனில் நரினும், 'கிப் அல்-ஹசனும் அந்த அணியின் பேட்ஸ்மேன்களை முடக்கினர். இதற்கு மத்தியில் கேப்டன் ரோகித் 'ர்மா (51 ரன், 45 பந்து, 4 பவுண்டரி, 2 சிக்சர்), அம்பத்தி ராயுடு (33 ரன், 27 பந்து, 3 பவுண்டரி, ஒரு சிக்சர்) ஆகியோர் மட்டும் ஓரளவு தாக்குப்பிடித்து ஆடினர். 20 ஓவர்களை முழுமையாக எதிர்கொண்ட மும்பை அணி 5 விக்கெட் இழப்புக்கு 141 ரன்கள் மட்டுமே சேர்த்தது. பொல்லார்ட் 10 ரன்களுடன் (11 பந்து), ஆதித்ய தாரே 2 ரன்னுடனும் களத்தில் நின்றனர்.

கொல்கத்தா தரப்பில் மோர்னே மோர்கல் 2 விக்கெட்டும், 'கிப் அல்-ஹசன் (4 ஓவரில் 21 ரன்), சுனில் நரின் (4 ஓவரில் 18 ரன்) பியு' சாவ்லா தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

எளிய இலக்கை நோக்கி விளையாடிய கொல்கத்தா அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 142 ரன்கள் திரட்டி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை ருசித்தது. தொடக்க ஆட்டக்காரர் உத்தப்பா 80 ரன்களும் (52 பந்து, 9 பவுண்டரி, 3 சிக்சர்), கேப்டன் கம்பீர் 14 ரன்களும், மனி' பாண்டே 14 ரன்களும், 'கிப் அல்-ஹசன் 9 ரன்களும் எடுத்து அவுட் ஆனார்கள். தனது 100-வது ஆட்டத்தில் விளையாடிய யூசுப் பதான் 20 ரன்களுடன் (13 பந்து, 3 பவுண்டரி) களத்தில் இருந்தார்.

10-வது ஆட்டத்தில் ஆடிய கொல்கத்தாவுக்கு இது 5-வது வெற்றியாகும். அதே சமயம் 10-வது போட்டியில் களம் கண்ட நடப்பு சாம்பியன் மும்பைக்கு இது 7-வது தோல்வியாகும். இதன் மூலம் அந்த அணியின் பிளே-ஆப் சுற்று கனவு ஏறக்குறைய முடிவுக்கு வந்து விட்டது. இந்த ஆட்டத்துடன் மும்பை வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா (இலங்கையை சேர்ந்தவ்ர்) சர்வதேச போட்டிக்காக இங்கிலாந்துக்கு புறப்படுகிறார்.

# ஐ.பி.எல் கிண்ணம் யாருக்கு? பிரபல ஜோதிடர் சொன்ன இரகசியம்

ஐ.பி.எல் 7வது தொடரின் கிண்ணத்தை வெல்ல ராஜஸ்தான், பஞ்சாப் அணிக்கு அதிக வாய்ப்புள்ளதாக பிரபல மும்பை



ஜோதிடர் கிரீன் ஸ்டோன் லோபோ கூறியுள்ளார்.

இவர் விளையாட்டு வீரர்களின் ஜாதகத்தை துல்லியமாக கணித்து இவர்கள் சாதிப்பதை கூறுவாராம்.

அதாவது 2011 ஆம் ஆண்டு நடந்த உலக்கிண்ணத்தில் அணித்தலைவர் டோனி சாதிப்பார் என்றும், ஐ.பி.எல் தொடரில் 2012ல் காம்பீரின் கொல்கத்தா, 2013ல் ரோகித் சர்மாவின் மும்பை அணி கிண்ணத்தை வெல்லும் என கூறியது நடந்துள்ளதாம்.

இந்நிலையில் இம்முறை விறுவிறுப்புடன் நடந்து வரும் ஐ.பி.எல் போட்டி பற்றி ஜோதிடர் கிரீன்ஸ்டோன் லோபோ கூறுகையில், கொல்கத்தா, சென்னை, மும்பை அணிகளுக்கு இம்முறை கிண்ணம் கிடையாது.

அதாவது டோனியின் அசாதாரணமான ஜாதக பலன் முடிந்துவிட்டது. இனி இவரால் பல அணிகள் பங்கேற்கும் தொடரில் சாதிக்க முடியாது. அதே போல் காம்பீர், ரோகித் ஏற்கனவே சாதித்து விட்டனர்.

ஆனால் பஞ்சாப்பின் பெய்லி, ராஜஸ்தானின் வாட்சன் என, இருவரும் 1981, 1982ல் பிறந்தவர்கள். இவர்களது வலுவான ஜாதக பலன் காரணமாக, 2014ல் கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்புள்ளது. இதற்கடுத்து ஐதராபாத் அணித்தலைவர் கர் தவானுக்கு அதிஸ்டம் அடிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

மிகக் குறைந்த கட்டணத்தில் புதியவனில் விளம்பரம் செய்யுங்கள்

தேசிய நாளிதழ்களுக்கு நிகராக மன்னாரில் இருந்து வெளிவரும்
புதியவன் நாளிதழில் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களை வெளியிடலாம்

வீடு, காணி விற்பனை
வீடு, கடை வாடகை
வாகன விற்பனை/வாடகைக்கு
திருமண சேவை
செல்லப்பிராணிகள் விற்பனைக்கு
கல்விச் சேவை

ஆகிய வற்றுக்கான விளம்பரங்களை வெறும் 400/= ரூபாவில் இருந்து பிரசுரிக்கலாம்.

மரண அறிவித்தல், 31ஆம் நாள் அறிவித்தல். ரூபாய் 500/= மட்டுமே.

ஏனைய அனைத்து விளம்பரங்களுக்கும் ரூபா 500/= இல் இருந்து

இன்றே அழையுங்கள். உங்கள் அனைத்து வியாபாரத் தொடர்புகளும் நன்றே பெருகிட வாருங்கள் புதியவன் அலுவலகத்திற்கு இல்லையேல் அழையுங்கள் கீழ்வரும் அலைபேசி இலக்கங்களை

விளம்பரப்பிரிவு
புதியவன்
பிரதான வீதி, மன்னார்.
023 2223545/077 7802720
0771770503

SINTHU
PC
DOCTOR TECH
Station Road, Mannar.
TP-023 2223088
077 9690258
Pc Repairing,
Pc Notebook Upgrading,
Maintenace, Software Installation......
Networking, ADSL Wire & Wire-Less
Setting & Confinguration & Troublr
Shooutin. PC & Notebook Sales & Accessories

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தில் 15.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org